ஸ்ரீ:

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥



-: ஸ்ரீ அலர்மேல்மங்கையுறைமார்பன் :-

ஸம்புடம் 17. ஜய ஸ்ரீ புரட்டாசி மீ

ஸஞ்சிகை 9. வர்ஷச்சந்தா ரூபாய் 3. SEPTEMBER - 1954

2 0 SEP 1954
MADRAS
SCANNED
1053.
54.
JL
NSH
N54.13.9
199550

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 256

2. ஸ்ரீ அழகியசிங்கரின் மஹிமை 260
[ஸ்ரீ. உப. ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிகதர்சனவிஜயத்வஜ, புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

3. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 261

4. செய்திகள் 262

5. திருப்பாவைக்கதை 263
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

6. அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் எம்பெருமான் 267
[ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அட்வோகேட், மதுரை.]

7. குருகுலஸல்லாபம் 269
[ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீஅஹோபிலமடம், திருவள்ளூர்.]

8. உபய வேதாந்த ஐககண்ட்யம் 271
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

9. நன்கொடைகள் 274

10. மாத்ருபித்ருபக்தி 275
[ஸ்ரீ. உப. ஓரகடம், கே. ஸுதர்சனாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

11. அட்டைப்படவிளக்கம் 278

12. "ஓரொன்றுதானே" 279
[ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

13. நீ ஸர்வஜ்ஞனுகவேண்டா 281
[ஸ்ரீ. உப. வில்லிவலம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, சிரோமணி, உபாத்யாயர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

14. 43-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமத்தொடர்ச்சி 283

15. ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் 284
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ஸ்ரீ புரட்டாசி மீ { ஸஞ்சிகை 9

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாந: |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ கருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணன் உலகினில் காணப்படும் எல்லோரிடமும் அனுப்ரவேசித்து அவர்களைக் காப்பாற்றுகிறான் என்பது நமது ஸித்தாந்தம். நமது ஸித்தாந்தத்தில் ஸம்பந்தப்படாதவர்களுக்குக் கூட இந்நிலைமை ஒத்துக்கொள்ள வேண்டித் தான் வரும். ஜீவன் உள்ள ஶரீரம் சலனம் செய்வதையும் வ்ருத்தியடைவதையும், ஜீவன் அற்ற ஶரீரம் நசித்துப் போவதையும் நாம் காண்கிறோம். ஆகவே ஒரு வஸ்துவின் அபிவிருத்திக்கு ஜீவன் என்று நாம் வ்யவஹரிக்கும் ஓர் ஶக்தி அவசியம் என்பதை எப்படி மறுக்க முடியும்? அதேபோல் ஜீவன் உள்ள ஶரீரத்திலும் அதை ஸகல வ்யவஹாரங்களிலும் ஈடுபடுத்த, அதைக் காப்பாற்ற அறிவுச் சுடர் போன்ற மற்றொரு ஶக்திவிசேஷம் அவசியம் என்பது நமக்குப் புலப்படும். உதாரணமாக ஜீவனுள்ளதும் வயதுக்கேற்ப அறிவு வளர்ச்சியுடைய ஓர் சிறிய பையனையும் ஆனால் ஜீவனுள்ள, வயதிற்கேற்ப அறிவுவளர்ச்சிப்பெறாதஓர்பையனையும் ஒத்திட்டுப்பார்த்தால் வித்யாஸம் நன்கு புலனாகும். முதற் பையனை புத்திசாலி என்றும் இரண்டாவது பையனை ஜடன் என்றும் சொல்லுகிறோம். இப்படியே ஒவ்வொரு ஜீவனையும் அதன் பூர்வ கர்மத்திற்கேற்ப அதை இன்புறவும் துன்புறவும் செய்யவும், ஆனால் அதை ரக்ஷிக்கவும் ஓர் அபூர்வஶக்தி ஒவ்வொருவரிடத்திலும் உண்டு.

இதைத்தான் நாம் ஸர்வாந்தர்யாமி என்கிறோம். இப்படி இல்லாத ஒரு வஸ்துவும் உலகில் காணமுடியாது. ஒருவர் அந்தர்யாமி எனக் கூறுவதை மற்றொருவர் அபூர்வஶக்தி எனக் கூறுகிறார். இந்த அபூர்வஶக்தி உலகில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த ஶக்தியுள்ளதாக இருக்கிறது. தான் நேரிலேயே இருந்து காரியங்களைச் செய்வதுபோல் இதரர்களைக்கொண்டும் அம்மாதிரி காரியத்தைச் செய்விக்கிறது. முக்கியமாக ஒவ்வொருவருக்கும் ஜ்ஞானமாகிய தீபத்தை ஏற்றி மனத்தில் புகுத்துவதற்கு ஓர் ஆசார்ய ஸ்வரூபத்தை ஸ்ருஷ்டிக்கிறது. லௌகிகரீதியில் விசேஷ ஶக்தி எனச் சொல்லப்படுவது வைதிகமுறையில் பரமாத்மா எனக் கூறப்படுகிறது. இப்பரமாத்மாவை அறிவதற்கும் முக்கியமான ஜ்ஞானத்தை நமக்குப் புகட்டும் ஓர் அரிய காரியத்தைத் தான் ஆசார்யரிடம் ஒப்படைத்திருக்கிறான் ஸர்வேச்வரன். ஸர்வேச்வரனான ஸ்ரீ ந்ருஸிம்ஹனே நமக்குப் பரமாசார்யனல்லவா? அதே ஸ்தானத்தில் தானே இதர ஆசார்யர்களும் தோன்றினார்கள். இப்பொழுதும் தோன்றுகிறார்கள். ஆகவே உலகில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய இரண்டு தத்துவங்கள் ஆசார்யனும் பரமாசார்யனுமே. ஜனன காலத்திலேயே மாதாபிதாக்கள் சரீரபோஷண லாலனாதிகாரணங்களால் அறியப்படுகிறார்கள். ப்ரயாஸையின்றியே இது நடைபெறுகிறது. ஆனால் இதேபோல் அல்லது இதைக்காட்டிலும் உயர்ந்த அறிவு ஆசார்ய பரமாசார்யர்களை அறிந்துகொள்வதே. அது ப்ரயாஸத்தினாலும் அத்ருஷ்டத்தினாலும் ஏற்படக்கூடியதாக இருக்கிறது.

ஸமீபத்தில் 4-9-54-ல் வெளியான ஓர் தின சரிப்பத்திரிகையில் ஓர் ஜில்லாவில் 3500 ஆரம்ப ஆசிரியர்களில் 1000 பேருக்கு மேல் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்றும், கடவுள் வணக்கம் தெரியாத பள்ளிக்குழந்தைகள் இருக்கிறார்கள்' என்றும் அந்த ஜில்லா அதிகாரிகளில் ஒருவர் கூறியிருக்கிறார். இதற்குக் காரணம் அப் பள்ளிகளில் உள்ள சூழ்நிலை தான். இம்மாதிரி சூழ்நிலை ஒருவனுக்கு ஏற்பட்டால் அவனுடைய ப்ராரப்தவிசேஷம் எனக் கூறலாம். ஒரு பெரிய ஸமூஹத்திற்கேற்பட்டால் அந்த ஸமூஹத்திற்கே ஏற்பட்ட ஓர் கெட்ட நிலைமை எனக் கூறுவதில் என்ன பிழை இருக்க முடியும்? இம்மாதிரி ஓர் ஸமூஹம் வீணாகப் பாழாகப் போகாமல் தீயவழியிலிருந்து நல்வழிக்குக் கொண்டு வருவதற்கு நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முயற்சித்தல் வேண்டும். நாட்டின் அறிவுத் திறனையும் அதன் மூலம் அந்நாடு உலகின் மதிப்பைப் பெருவதற்கும் நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டியது அவசியமல்லவா?

முதலில் நமக்கு நல்ல அறிவும் ஆற்றலும் இருந்தால்தானே நாம் இம் மாதிரி புனித கைங்கர்யங்களில் ஈடுபடுவோம். அதற்காகவே நாம் வாங்மயஸித்திக்காக ஸ்ரீயப்பதியை உபாஸிக்கிறோம். ஆத்மதத்வவிசாரம் செய்யும் ஆசார்யர்கள் மாத்திரம் இப்படி ஆத்மஜ்ஞாந ஸித்திக்காக பகவானை உபாஸிக்கிறார்கள் என எண்ணவேண்டாம். ஸாமான்ய கவிகள் கூட வாங்மயஸித்திக்காக பகவானைத் துதிப்பதைக் காவியங்களில் காண்கிறோம். ஆகவே பகவத் பக்தி இல்லாதவனுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படாது; அறிவு குன்றும் என்பதில் ஐயமில்லை. இப்பேர்ப்பட்டவர்கள் சிறுவர்களுக்கு ஆசிரியராகவும் வரும்படி நேர்ந்தால் அந்தச் சிறுவர்களின் கதிதான் என்ன? இம்மாதிரியான நிலைமை சிலகாலங்கூட நீடித்திருந்து நாடும் ஸமூஹமும் சீர்கெடாமல் இருக்கும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென்று ஆஸ்திகர்களாகிய நாம் எல்லோரும் நமது ஆசார்யர்களையும் பரமாசாரியனையும் பலகாலம் ப்ரார்த்திக்கவேண்டும்.

* * * * *

பல வருஷங்களாகத் திருவள்ளூரிலேயே சேவையில் கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாலோலன் என்ற ஸ்ரீ ந்ருஸிம்ஹமூர்த்தி திடீரென்று வெளியே எழுந்தருளி தனது ஆஸ்தானமான ஸ்ரீ அஹோபிலம் சென்று கடாக்ஷித்து

ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரம்

அங்கிருந்து தனது ப்ரதமசிஷ்யரான ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திரு அவதாரஸ்தலமான மேலக்கோட்டை என்ற திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளி அங்கு பல அரிய காரியங்களைச் செய்ய ஸங்கல்பித்தும், பூர்த்தி செய்தும் அதன் பிறகு நமது ஸ்ரீ ஸந்நிதிக்கு விசேஷ பாத்யதையுடைய ஸ்ரீ ஆதிப்பிரானும், ஸ்ரீ நம்மாழ்வாரும் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ஆழ்வார்திருநகரிக்கு எழுந்தருளித் தனது முதல் ஸஞ்சாரத்தைப் பூர்த்திசெய்துகொண்டான். இதுவரையில் ஏற்பட்ட ஸஞ்சாரத்வரையின் அபிகாதத்தைநீக்கிக்கொள்ள ஸ்ரீ ரங்கநாதஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் ப்ருந்தாவனத்தால் புனிதமாக்கப்பட்ட வைகையாற்றின் கரையிலுள்ள துவரிமான் அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினான். இந்த ஸங்கல்பகாலமும் பூர்த்தியாகிறது. மறுபடியும் தமது ஸஞ்சாரத்தை ஆரம்பிக்கவிருக்கிறான் ஸ்ரீ மாலோலன். ஸ்ரீ ந்ருஸிம்ஹனை நேரில் ஸேவிக்கவும், ஸேவை புரியவும் யார் யாருக்கு பாக்யம் ஏற்பட்டிருக்கிறதோ நாம் அறியோம். அநேகமாக ஸ்ரீ ந்ருஸிம்ஹன் இதுவரை புண்யக்ஷேத்ரங்களில் வஸிக்கும் சிஷ்யர்களுக்கு நேரில் ஸேவை ஸாதித்து அநுக்ரஹித்ததுபோல் புண்யதீர்த்தங்களின் ஸமீபத்தில் வஸிக்கும் சிஷ்யர்களை நேரில் எழுந்தருளி அநுக்ரஹிப்பான் என்று நாம் எண்ண இடமிருக்கிறது. ப்ராங்முகமாக ஸ்ரீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளி ஸ்ரீ ராமபிரானால் விபவாவதாரத்தில் புனிதமாக்கப்பட்ட ஸேது க்ஷேத்ரத்தைக் குறித்து எழுந்தருளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

* * * * * * *

நமது ஸம்ப்ரதாயத்திற்கு உபயவேதாந்தம் என்ற ஒரு திருநாமமுண்டு. அதாவது ஸம்ஸ்க்ருதமொழியில் அமைந்துள்ள வேதங்களும் அதன் கருத்துக்களைப் பின்பற்றி ஆழ்வார்களால் அநுக்ரஹிக்கப்பட்ட ப்ரபந்தங்களும் நமக்கு முக்கியமானவைகள். இவைகள் நீங்கலாக நமது ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றி எழுதப்பட்ட தமிழ் காவ்யங்களோ, ப்ரபந்தங்களோ மிகச் சிலவே. கம்பராமாயணமும் பிள்ளைப்பெருமாளய்யங்கார் எழுதிய அஷ்டப்ரபந்தமும், ஸ்ரீ வில்லிபுத்தூரார் பாரதமும் முக்கியமான ப்ரபந்தங்கள்.

ஸ்ரீவைஷ்ணவ தமிழ் ப்ரபந்தங்கள்

ஆனபோதிலும் அவைகளைப் போல் அநேகப் ப்ரபந்தங்களை நாம் பெற்றிருக்கவில்லை. தமிழ் ப்ரபந்தங்களில் அந்தாதி, வெண்பா, கலித்துறை, பிள்ளைத்தமிழ் என்று அநேகவிதமான ப்ரபந்தவகைகளில் பிற சமயங்கள் போற்றப்படுவதை நாம் இப்பொழுதுகூடக் காண்கிறோம். ஆனால் வைஷ்ணவஸம்ப்ரதாயம் மட்டில் அம்மாதிரியான பலவித தமிழ்ப்ரபந்தவகைகளில் காணப்படவில்லை. இவ் விஷயத்தைப் பல அன்பர்களிடம் விஜ்ஞாபித்ததில் ஸ்ரீவைஷ்ணவப் ப்ரபந்தங்கள் பலவிடங்களில் பல பெரியோர்களால் எழுதப்பட்டு எழுத்துப் பிரதிகளாகவே காப்பாற்றப்படுகின்றன என்றும், பொருளாதாரநிலையால் அவைகள் அச்சிடப்படவில்லை என்றும் கேள்விப்படுகிறோம். ஆதலால் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தில் உள்ள ஆஸ்திகப்ரபுக்கள் இம்மாதிரி ப்ரபந்தங்களை அச்சிடுவதற்குத் தம்மால் இயன்ற பொருளுதவி செய்தால் நமது ஸம்ப்ரதாயவளர்ச்சிக்குப் பேருதவி செய்ததாக ஆகும் என்பதை நாம் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

* * * * *

ஸ்ரீ அஹோபிலமடத்தின் சிஷ்ய ஸம்பத்து

ஸ்ரீ அஹோபில மடத்திற்குச் சிஷ்யர்கள் இந்தியாவில் எல்லா பாகங்களிலும் வியாபித்திருக்கிறார்கள். ஆனால் எந்த எந்த இடங்களில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்; யார் யார் இருக்கிறார்கள் என்ற விபரங்கள் ஸரிவரத் தெரியாது. அரசாங்கத்தின் பல்வேறு சீர்திருத்தங்களை உத்தேசித்து நாட்டிலுள்ள மக்களின் புள்ளிவிபரங்களை அவ்வப்பொழுது சேகரிப்பதை நாம் பார்க்கிறோம். அதே மாதிரி நமது ஸ்ரீ ஸந்நிதியிலும் ஓர் குறிப்பு இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இக்காரியத்தைப் பலருடைய உதவியின்றி ஒருவராகச் செய்து முடிப்பது தத்காலமுள்ள சூழ்நிலையில் ஸாத்யமாகாது. ஸ்ரீ அஹோபில மடத்து சிஷ்யர்களின் பெயர், வ்ருத்தி, முதலியஸகல குறிப்புக்களையும் தயார் செய்யவேண்டும் என்ற அவா மாத்திரம் நமக்கு அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் உள்ள அன்பர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு சிறிதளவு காலத்தை இதற்கு உபயோகித்தால் வெகு சீக்கிரத்தில் இந்தப் பட்டியல் தயாராகும் என்பதில் நமக்கு ஐயமில்லை. இது ஸம்பந்தமான வேறு சில ஏற்பாடுகளையும் நாம் செய்ய உத்தேசித்துள்ளோம். ஆப்தர்களில் இம்மாதிரி கைங்கர்யத்தில் சிறிதளவேனும் பங்கெடுத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் நமக்குத் தெரிவித்தால் அதற்கு வேண்டிய இதர வஸதிகளை நாம் செய்து கொடுப்போம்.

* * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆசார்யஜயந்தி மலர்

புரட்டாசித் திருக்கேட்டையில் திருவவதரித்த ஆசார்யோத்தமரே நம் ஸந்நிதி ஸ்தாபகர். அம் மஹான் ஓர் பெரிய ஸ்தாபனத்தை உலகெங்கும் ஸ்தாபித்தது ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய ஆஜ்ஞையினாலும், அநுக்ரஹவிசேஷத்தினாலும் என்பதை நாம் நன்கு அறிவோம். அப்புண்யச்ரேஷ்டரின் திருவவதார உத்ஸவத்தைப் பலவிடங்களிலும் நாம் நடத்தி வருகிறோம். அப்படி நடத்த முடியாத இடங்களிலும் இம் மஹானின் திருவவதாரத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொள்வதற்காக நமது பத்திரிகையில் ஓர் விசேஷமலரை வெளியிடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

புரட்டாசித் திருவோணத்தில் புவியுதித்த ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்ரீ நிகமாந்தமஹா தேசிகனின் திருநக்ஷத்ரமஹோத்ஸவமும் அநேக இடங்களில் வெகு விமரிசையாக நடத்தப்படுவதை நாம் நன்கு அறிவோம். அம்மஹானின் அவதாரவிசேஷத்தையொட்டியும், வரப்போகும் விசேஷ ஜயந்திமலர் வெளியிடப்படும்.

இம் மாதிரியான விசேஷ மலருக்கு- அம்மஹான்களின் விஷயமாக வ்யாஸங்கள் எழுதுவது நமது ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு மிகவும் ப்ராப்தம். நம் ஸம்ப்ரதாயத்திலுள்ள ப்ரஸித்த பண்டிதர்களும் மற்ற ஆஸ்திகர்களனைவரும் தம்மால் இயன்ற அளவு வ்யாஸங்களை எழுதி அனுப்பவேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

*   *   *   *   *   *   *

'ब्राह्मणेन निष्कारणेन षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च' என்ற வாக்கியத்தை அநுஸரித்து எல்லா ப்ராஹ்மணர்களும் தங்களுக்கு ஏற்பட்ட வேதாத்யயனம் செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

திருவள்ளூர்
ஸ்ரீ அஹோபிலமடத்தில்
வேத,ப்ரபந்த பாடசாலைகள்

நாம் செய்ய வேண்டிய கடமைகளை அவசியம் செய்தே தீர வேண்டுமேயல்லாது, ஏன் அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்பதில் பிரயோஜனமில்லை. பரம்பரையாகவே ஆசார்யமுகமாகவே அத்யயனம் செய்து அறிந்து கொள்ளவேண்டியதே வேதம். புஸ்தகம் பார்த்துத் தானே தெரிந்துக்கொள்ள முடியாதது. ஸமீபகாலம் வரையில் வேதாத்யயனத்தில் இருந்து வந்த நம்பிக்கை தத்காலம் குறைந்துகொண்டே வருகிறது. ஏன் இப்படிக் குறைகிறது என்று கேட்கும் பொழுது வ்'தோத்யயனம் செய்ததற்குத் தகுந்த கைம்மாறு இவ்வுலகிலில்லையென்று பல பண்டிதர்கள் கூடக் கூறுவதை நாம் கேட்டு நமது நிலைமையைக் குறித்து வருந்தவேண்டியிருக்கிறது. உண்மையில் அத்யயனத்தில் உள்ள ஶ்ரத்தை குறைவு தான் முக்கிய காரணம்.

இம் மாதிரியான ஶ்ரத்தைக் குறைவைப் போக்கடிப்பதற்கும் இம்மாதிரி அத்யயனம் செய்தவர்களுக்குப் பிற்காலவாழ்க்கையில் சில ஸௌகர்யங்களைச் செய்து கொடுக்கவும் ஸ்ரீமதழகியசிங்கர் ஓர் புதிய ஏற்பாடு செய்யும்படி திருவுள்ளம் பற்றியாகி இருக்கிறது.

திருவள்ளூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஓர் பாடசாலை ஏற்படுத்தப்படும். அதில் சேரும் மாணவர்களுக்கு வேதமும், ஆழ்வார் ஆசார்யர்களுடைய திவ்யப்ரபந்த ஸ்ரீஸூக்திகளும் அத்யயனம் செய்விக்கப்படும். அத்யயன காலத்தில் வித்யார்த்திகளுக்கு இலவசபோஜன வஸதி இடவஸதி இவைகள் ஏற்பாடு செய்யப்படும். அத்யயனகாலத்திலும், அத்யயனம் முடிந்த பிறகும் இப் பாடசாலையில் அத்யயனம் செய்யும் வித்யார்த்திகள் ஸ்ரீ ஸந்நிதியிலோ, ஸ்ரீ ஸந்நிதி நிர்வாஹத்திலுள்ள தேவஸ்தானம் முதலிய இதர இடங்களிலோ கைங்கர்யங்கள் செய்து வரவேண்டும். மேற்படி வித்யார்த்திகளுக்கு கைங்கர்யத்திற்காகவும் குடும்பபரணத்திற்காகவும் ந்யாயமான அளவில் ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்படும்.

வித்யார்த்திகள் அத்யயனத்திற்குப் பிறகு க்ருஹஸ்தாஶ்ரமத்தில் ப்ரவேசிப்பவர்களுக்கும் அதற்கநுகுணமான முறையில் ந்யாயமான அளவில் ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்படும். இவ்வளவிற்கும் இப் பாடசாலையில் சேரும் வித்யார்த்திகள் ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்யத்தில் அந்வயிக்கவேண்டும் என்பது முக்கியமான நிபந்தனை.

(இப் பாடசாலையில் சேர விருப்பமுள்ள வித்யார்த்திகள், மதுராந்தகம், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை அத்யக்ஷருக்கு உடனே மனுச்செய்துகொள்ள வேண்டும்.)

*   *   *   *   *   *   *

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் மஹிமை

[ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலையின் ஆரம்பகாலத்தில் பண்ணப்பட்டது.]

𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌨𑌾𑌯 𑌜𑌗𑌤𑌿 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌯𑍋𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑍋 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹
𑌸𑍍𑌸𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌗𑌰𑍁𑌡𑌗𑌿𑌰𑌿𑌗𑍁𑌹𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌾𑌸𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 ।
𑌸𑍋𑌽𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌕𑌲𑌿𑌕𑌲𑍁𑌷𑌵𑌶𑌾𑌦𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯
𑌜𑌾𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌰𑌿𑌪𑍁𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍍𑌯𑍋𑌽𑌹𑍋𑌬𑌿𑌲𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌾𑌹𑍀 ॥ ௧

𑌯𑌥𑌾 𑌰𑌾𑌮𑌾𑌵𑌤𑌾𑌰𑍇 𑌸𑍍𑌵𑌵𑌚𑌨𑌵𑌚𑌸𑌾 𑌨𑌾𑌹𑌮𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑍋
𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌰𑌕𑍍𑌷𑍀 𑌸𑌕𑌲𑌰𑍍𑌷𑌿𑌸𑌮𑌶𑍍𑌚𑍇𑌤𑍍𑌯𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌮𑍍 ।
𑌸𑍋𑌽𑌸𑍌 𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌰𑌿𑌪𑍁𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍍𑌯𑍋 𑌜𑌾𑌤 𑌏𑌵𑌾𑌤𑍍𑌰𑍇𑌦𑌾𑌨𑍀𑌮𑍍
𑌸𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿 𑌬𑍁𑌧𑌮𑌣𑌿𑌭𑌿𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌸 𑌜𑍀𑌯𑌾𑌤𑍍 ॥ ௨

𑌸𑍋𑌽𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌮𑌥𑌨𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌤𑍍𑌰 𑌦𑍇𑌶𑍇
𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌯 𑌬𑌹𑍁𑌨𑌗𑌰𑌵𑌰𑍇 𑌪𑌾𑌠𑌶𑌾𑌲𑌾 𑌵𑌿𑌧𑌾𑌯 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌯𑍇 𑌵𑌿𑌧𑌿𑌶𑌿𑌵𑌮𑌹𑌿𑌤𑍇 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌤𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑍈
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌶𑌾𑌲𑌾𑌂 𑌵𑌿𑌤𑍇𑌨𑍇 𑌸𑌕𑌲𑌗𑍁𑌣𑌯𑍁𑌤𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌶𑍍𑌰𑍀𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌾𑌮𑍍 ॥ ௩

𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑌠𑌾𑌧𑍀𑌶𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑍈𑌃 ।
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌪𑍍𑌰𑍀𑌤𑌯𑍇 𑌕𑍢𑌪𑍍𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌶𑌾𑌲𑌾 𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑌾𑌮𑍍 ॥ ௪

[முன்பு க்ருதயுகத்தில் இவ்வுலகத்தில் தர்மஸம்ரக்ஷணார்த்தமாக யாதொரு பகவானானவன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனாக அவதரித்து, ஸாதுஸம்ரக்ஷணம் பண்ணி தர்மத்தை ஸ்தாபித்துவிட்டு கருடாசலமென்னும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தில் நித்யவாஸரஸிகனாக ஆனானோ; அதே பகவான் கலியின் தோஷத்தால் நாசமடைந்த தர்மங்களைக்கண்டு, அவைகளை ஸம்ரக்ஷிக்க ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்தை வஹிக்கும் ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனாய் அவதரித்தான்.

ஸ்ரீ ராமாவதாரத்தில் ஸாதுஸம்ரக்ஷணம் செய்யத் திருவுள்ளங்கொண்டு 'நான் அர்த்தத்தில் நோக்குடையேனல்லேன், தர்மத்தையே ரக்ஷிப்பேன்; ஸர்வ ரிஷிகளுக்கும் ஸமன்' என ப்ரதிஜ்ஞையை யாதொரு பகவான் செய்தானோ, அந்த ஸ்ரீராமனே தன் வாக்குறுதியைக் காப்பாற்ற ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனாய் அவதரித்திருக்கிறார் என்று வித்வன்மணிகளால் கொண்டாடப்படும் ஸ்ரீ அழகியசிங்கர் விளங்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் இத்தேசத்தில் தர்மஸம்ஸ்தாபனார்த்தமாக அநேக பட்டணங்களில் பாடசாலைகளை ஸ்தாபித்து, ப்ரஹ்மருத்ராதிகளாலும் பூஜிக்கப்பட்ட இந்த ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் ஸ்ரீ ரங்கநாதனுடைய ப்ரீத்யர்த்தமாக ஸம்ஸ்க்ருதஸ்ரீயாலே நிறைந்தும் மற்றுமுள்ள லௌகிகவித்யைகளைப் போதிப்பதுமான ஓர் வித்யாசாலையை ஸ்தாபித்தருளியிருக்கிறது.

ஸ்ரீமதஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீவீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனால் ஸ்ரீ ரங்கநாதனுடைய ப்ரீதியின்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த வித்யாசாலையானது மேன்மேலும் சிறப்புற்று விளங்கவேண்டும்.]

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

துவரிமானில் எழுந்தருளியிருக்கும் பொழுது ஊர்வாஸிகள் மழை பெய்யாமல் இருப்பதால் வெள்ளிமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லா மூர்த்திகளுடனும் பெரிய பெருமாளுக்குத் திருமஞ்ஜனம் நடக்கவேணும் என்று ப்ரார்த்தித்து, அதன்படி ஆடிமீ 7௳ நடத்திவைத்தார்கள். அதன் பிறகு க்ரமேண நல்ல மழை பெய்து ஸௌகர்யமாயிற்று. ஆடிமீ 27௳ ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்தன்று விசேஷ ததீயாராதனம் பண்ணிவைத்து ஸ்ரீ கண்ணனுக்கு வீதி உத்ஸவமும் பண்ணி வைத்தார்கள். நன்றாக வாசிக்கும் வாத்தியக்காரர்களையும் வரவழைத்து வாணம், மத்தாப்பூ, தீவட்டி, விளக்குகளுடன் வீதி உத்ஸவத்தை மிகவும் விமரிசையாக நடத்தி வைத்தார்கள். அனேகமாக அங்கே எழுந்தருளியிருக்கும் காலங்களில், 10 நாளைக்கு ஒரு தரம் பெரிய திருமஞ்ஜனம் நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் இவ்விடம் எழுந்தருளின மறுதினமே கிராப் முதலிய துராசாரங்களை விட்டுவிட்டு எல்லோரும் தவறாமல் பன்னிருநாமம் தரித்து வந்தார்கள். ஆவணிமீ 17௳ வெள்ளி மண்டபத்தில் உள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அவ்வூர் ஆஸ்திகர் ஒருவர் திருமஞ்ஜனம் பண்ணிவைத்தார். அன்று நித்யப்படி நடந்து வந்த பகவத்விஷய (ஈடு) காலக்ஷேபமும், வேதார்த்தஸங்க்ரஹமும் பூர்த்தியாகி சாற்றுமுறை நடந்தது. 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்நாளில் இரண்டுஸ்ரீ அழகியசிங்கர்கள் எழுந்தருளி யிருந்தபோது ஈடு ஆரம்பிக்கப்பட்டு நான்குபத்துவரையில் நடந்தது. அநத்யயனத்தில் மேல் தொடராமல் இருந்தது. பிறகு விஜய௵ வைகாசிமீ விசாகத்தன்று உபக்ரமிக்கப்பட்டு க்ரமமாய் நடந்து வந்தது சாற்றுமுறையாயிற்று. அப்பொழுது காலக்ஷேபவித்யார்த்திகளால் யதாஶக்தி ஸம்பாவனை பண்ணப்பட்டது. பிறகு ஊர்வாஸிகள் ஆஹ்நீகம் காலக்ஷேபம் நடக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தபடியால் இப்பொழுது ஆஹ்நிக காலக்ஷேபம் நடந்து வருகிறது.

40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ப்ருந்தாவனத்தில் கீழ்ப்புரத்திலிருந்த காலிமனையில், மதில்சுவர் எழுப்பப்பட்டு பின்புரங்களிலும் கிராம முன்ஸீப், ஸ்ரீ ஜகந்நாதாச்சாரியர் இனமாகக் கொடுத்த மனையிலும், ப்ருந்தாவனம் ஆராதகர் ஸ்ரீ ஸுந்தராச்சாரியர் வகையறா இனமாகக் கொடுத்த மனையிலும் தென்னம்பிள்ளைகள் வைக்கப்பட்டிருக்கிறது. இது விஷயங்களில் உள்ளூர் வாஸிகள் உத்ஸாஹம் காட்டினார்கள். ஸ்ரீ. உப. வித்வான் முக்கூர், ராஜகோபாலாசார்ய ஸ்வாமியையும், ஸ்ரீ. உப. ஸ்ரீகார்யம், வித்வான், ஜோ. ரங்காசார்யஸ்வாமியையும் மற்றுமுள்ள ஸந்நிதி வித்வான்களையும் ஊரார் ப்ரார்த்தித்து தினந்தோறும் உபந்யாஸம் நடந்து வந்தது.

ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரம் ஆரம்பித்தது திருவள்ளூரில். அங்கிருந்து ஆந்த்ரதேசம், கர்நாடகதேசம், கேரளதேசங்களிலும், பிறகு பாண்டியதேசத்திலும் ஸஞ்சாரம் நடந்துவருகிறது. இதுவரை ஸுமார் 1700 மைல்கள் ஸஞ்சாரம் நடந்து வந்திருக்கிறது. ஸுமார் 2500 பேர்களுக்குமேல் ஸ்ரீ அழகியசிங்கரை ஆஶ்ரயித்து ஸமாஶ்ரயண பரந்யாஸாதிகளைச் செய்து கொண்டார்கள்.

சென்ற ஸம்வத்ஸரத்தில் கடப்பையில் புதிதாக மடம் ஏற்படுத்தி ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன் ப்ரதிஷ்டையும், திருநாராயணபுரம் ப்ருந்தாவனத்தில் கட்டிடம் கட்டி ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ரமஹா தேசிகன் ப்ரதிஷ்டையும், மைஸூரில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன், ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ரமஹா தேசிகன் ப்ரதிஷ்டைகளும் நடந்தன. அஹோபிலத்தில் புதிதாகக் கிணறு வெட்டப்பட்டு வீதியிலிருந்த பழைய கிணறுகள் பழுதுபார்க்கப்பட்டு ஆழமாக எடுத்துக் கட்டப்பட்டன.

மற்ற சில்லரை ரிப்பேர்கள் அவ்விடம் செய்யப்படுகின்றன. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குப் புதிதாகத் தங்கப்பல்லக்கு செய்யப்பட்டும், திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தை வாசல் கேட்டு முதலியன போட்டுப்புதுப்பிக்கப்பட்டும், திருவள்ளூரில் உள்புஷ்கரிணியும் கட்டப்பட்டது. ஸ்ரீ அஹோபிலத்தில் ஸுமார் ரூபாய் 10000, கைங்கர்யமும், மற்ற கார்யங்களில் ரூபாய் 35000 வரையிலும் செலவு பண்ணப்பட்டிருக்கிறது. இப்பொழுது திருக்குடந்தை மடத்தை வடக்குப் பார்த்து கட்டியும், திருவள்ளூர் மடத்தில் ரிபேர்களும், ஸ்ரீவில்லிபுத்தூர், வடுவூர், மன்னார்குடி, நரஸிம்ஹபுரம் மடங்களில் ரிபேர்களும் நடந்து வருகின்றன.

துவரிமானில் ஸ்ரீ அழகியசிங்கர் மிகவும் உகப்புடன் அடிக்கடி கீழ்க்கண்டபடி ஸாதிக்கும்படி யிருக்கிறது.

மற்றவிடங்களை விட இவ்விடத்திற்கு ஏற்றமாவது:- இவ்விடத்திற்குத் தன்னுடைய (ஸமாஶ்ரயண பரந்யாஸ) ஆசார்யர்களான காருக்குறிச்சி இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களுடையவும் சேர்த்தி அமைந்திருக்கிறது. அதாவது ஒரு அழகியசிங்கருடைய அவதார ஸமாபனம்; மற்றொரு அழகியசிங்கருடைய அவதாராரம்பம். தவிர நடந்த ஸங்கல்பம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ப்ராதுர்ப்பாவஸ்தலமென்று ஏற்றமிருந்தாற்போல் அவனது திருநாமத்தை வஹித்த ஸ்ரீ அழகியசிங்கருடைய ஆஸ்தானாதிபத்யம் ஆரம்பித்த ஸ்தலமாதலால் ஏற்றமுள்ளதென்று மாலோலன் இந்த ஸங்கல்பத்தை இங்கு நடத்திக்கொண்டான்' என்று. அவ்விடமுள்ள மற்ற ஸௌகர்யங்களுடன் இந்த விசேஷத்தையும் உகந்துகொண்டு எழுந்தருளியாயிருந்தபடி. ஆவணிமீ 27வ உத்தானம் நடந்தது. பரவை கிராமத்திற்கு எழுந்தருளி, அங்கிருந்து மதுரை, தெல்லாகுளம், மானமதுரை மார்க்கமாகத் திருப்புல்லாணிக்கு எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றியாகியிருக்கிறது.

ஸ்ரீ:

செய்திகள்

நிகழும் ஜயஸு ஐப்பசிமீ 24வ (9-11-54) செவ்வாய்க்கிழமை சுக்ல சதுர்தசியன்று ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்வாமியென்று ப்ரஸித்தராய் ஜ்ஞானவைராக்யாநுஷ்டானஸம்பன்னராய் எழுந்தருளியிருந்த பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸமஹாதேசிகனுடைய வர்ஷாரதனமஹோத்ஸவம் நடைபெறும். தத்ஸமயத்தில் சென்ற மூன்று வர்ஷம் போல் இவ்வருஷமும் ஸ்ரீ தேசிகக்ரந்தங்களில் லேகந பரீக்ஷை நடைபெறும். சென்ற வருஷம் ஸபையில் தெரிவித்தபடி (அதிகரணஸராவளியில் முதலத்யாயமும், தத்வமுக்தாகலாபத்தில் புத்திஸரம் முழுவதும்) இவ்வருஷத்தில் லேகந பரீக்ஷைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப்பரீக்ஷை ஜயஸு ஐப்பசிமீ 22வ (7-11-54) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்தப்பரீக்ஷையில் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களே அந்வயிக்கத்தகுந்தவர்கள்.

ஸ்ரீ. ர. ஸ்ரீதாஸன்.

கலியன் ப்ரதிஷ்டோத்ஸவம், பாதூர்.

நிகழும் ஜயஸு ஆவணிமீ 18வ வெள்ளிக்கிழமை காலை ஸிம்ஹ லக்னத்தில் பாதூர் ப்ரஸந்நவெங்கடேசப் பெருமாள் ஸன்னிதியில் திருமங்கைமன்னன் உத்ஸவ விக்ரஹம் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. 16வ புதன்கிழமை ராத்திரி அங்குரார்பணம் முதலியன ஆரம்பிக்கப்பட்டது. 17வ வியாழக்கிழமை ஸ்ரீபெருமாள், தாயார் முதலானவர்களுக்கு மஹாசாந்திஹோமமும், ஸம்ப்ரோக்ஷணமும் நடத்தப்பட்டது. ஸம்ப்ரோக்ஷணமும்ப்ரதிஷ்டையும், தளவானூர் வைகாநஸபட்டர் வித்வான் ஸ்ரீநரஸிம்ஹாசார்யர்ஸ்வாமியால் வைகாநஸவிதிப்படி மிகவும் சிறப்பாக தர்மகர்த்தா ஸ்ரீசுந்தரம்ஐயங்கார் முயற்சியால் நடத்தப்பட்டது. அன்றுராத்ரி திருமங்கை மன்னனுக்கு குதிரைவாஹனத்தில் வீதிஉத்ஸவமும் பெருமாள், தாயார்ஸந்நிதிகளில் மங்களாசாஸனமும் நடைபெற்றது.

தூப்புல், ராஜகோபாலதாஸன்.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அப்படி ப்ரார்த்தித்தும் கதவு திறக்கப்படவில்லை. அதனால் நாயகப் பெண்ணுக்கு வேறொரு ஸந்தேஹம் உண்டாயிற்று. 'ஏதோ சிறு பெண்கள் வந்து அழைக்கின்றார்கள். பொழுதுதான் இன்னம் விடியவில்லையே. இப்பொழுதே ஏன் கதவைத் திறக்கவேண்டும்? சிறிது நேரம் செல்லட்டும். பிறகு திறப்போம் என்று எண்ணி ஒருகால் பிராட்டி கதவைத் திறக்காமல் இருக்கலாம்' என்று. இப்படி ஸந்தேஹப்பட்டு 'பொழுது விடிந்து விட்டது' என்பதைப் பிராட்டிக்கு அறிவிக்கவேண்டும் என்று கருதி **வந்தேங்கும் கோழி யழைத்தன காண்** என்றாள். ஏதோ ஒரு கோழி ஏதோ ஓரிடத்தில் கூவவில்லை. ஊரிலுள்ள எல்லாக் கோழிகளும் இராக்காலத்தில் தங்குமிடங்களிலிருந்து வெளிக் கிளம்பி எல்லாப் பக்கங்களிலும் வந்து கூவின. ஆகையால் பொழுது இன்னும் விடியவில்லை என்று எண்ணி நீ கதவைத் திறக்காமல் இருக்கவேண்டாம். விடிந்து விட்டது. வந்து திற, என்று அறிவித்தாள்.

அக்கம்பக்கங்களில் கோழி கூவினது பிராட்டியின் காதில் விழாமலிருந்திருக்கலாம். 'எனக்குக் கேட்கவில்லையே' என்று அவள் எண்ணிக்கொண்டிருக்கக் கூடும். ஆகையால் அதன் மேலும் நாயகப் பெண் 'குயில்கள் கூவினவே. கூட்டங் கூட்டமாய் இருந்து கூவினவே. பல தடவைகள் கூவினவே. நமது அரண்மனைத் தோட்டங்களிலேயே கூவினவே. அதைக் கேட்டாகிலும் நீ நன்றாக விடிந்து விட்டது என்பதை அறியலாமே' என்றாள். நடுவில் சில நிமிஷங்கள் அயர்ந்து விட்டதனாலோ, எம்பெருமானுக்காக ஸித்தப்படுத்த வேண்டிய விஷயங்களிலேயே முழுக் கவனமும் சென்றிருந்தபடியால் மற்ற இந்திரியங்களெல்லாம் தமது சக்தியை இழந்திருந்ததனாலோ குயில்கள் கூவினதையும் பிராட்டி கேட்காமல் இருந்திருக்கலாம். 'கோழி கூவினது போலவே குயில் கூவினதும் என் காதில் விழவில்லையே' என்று பிராட்டி எண்ணலாம். அதனால் நாயகப் பெண் மற்றொரு விஷயத்தை அவளுக்கு அறிவிக்க விரும்பினாள். ஸ்ரீ க்ருஷ்ணனுடைய சயன க்ருஹத்திற்கு அருகே அதை சற்றிப் பந்தல் போட்டுப் பல கொடிகள் படர விடப்பட்டிருந்தன. கொடிகள் வளர்ந்து பந்தல் மேல் முழுவதும் படர்ந்து நடு மத்யான்னத்திலும் ஸூர்யகிரணம் ப்ரவேசிக்காமல் காத்து நல்ல நிழல் தந்து எங்கும் குளிர்ந்திருக்கும்படியும் புஷ்பங்களின் பரிமளத்தினால் வாஸிக்கும்படியும் செய்தன. கோப கன்யைகள் அங்குப் போனபொழுது கூவின குயில்களெல்லாம் அந்தப் பந்தல்களின் மேல் இருந்தவை. உள்ளிருக்கும் பிராட்டி படுக்கையில் இருந்தபடியே ஸமீபத்தில் இருக்கும் ஜன்னலின் பட்டுத் திரைச் சீலையைச் சிறிது தள்ளிப் பார்த்தால் அவற்றில் சில இவள் கண்ணுக்கே புலப்படக் கூடும். அதிலிருந்து அவள் குயில்கள் உறக்கம் நீங்கி வெளிக்கிளம்பியதையும் அதனால் பொழுது விடிந்ததையும் தானே நிஸ்ஸம்சயமாக அறியலாம். ஆகையால் 'நீயே அவ்விதம் பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்' என்று குறிப்பால் அறிவிக்க விரும்பி **மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்** என்று அங்குள்ள மாதவிப் பந்தல் மேலுள்ளனவாகக் குயில்களைக் கூறினாள். மாதவி என்பது ஒரு கொடி. குருக்கத்தி என்பர். இப்படி அறிவித்த பிறகும் கதவு திறக்கப்படவில்லை. இதற்கென்ன காரணமாயிருக்குமென்று நாயகப் பெண் ஆலோசித்துப் பார்த்தாள். ஒன்று தோன்றிற்று. 'பிராட்டியின் தேஹம் மிக ம்ருதுவானது. கதவின் தாட்பாளை நீக்குவதினால் உண்டாகக் கூடிய ச்ரமத்தை ஸஹிக்கக் கூடியதன்று ம்ருதுவான அவளுடைய திருக்கை. இதைக் கருதி, ஸ்ரீ க்ருஷ்ணன் விழித்தெழுந்த பிறகு அவர்தான் கதவைத் திறக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் பிராட்டி எழுந்து வராமல் இருக்கலாம்' என்று தோன்றியது. அதன் மேல் 'இந்த ச்ரமம் உனக்கு ஏற்படும் என்பது உண்மை. ஆயினும் அதைப் பொருள்படுத்தாமல் வந்து திறக்கவேண்டும். எம்பெருமானும் மற்றோரும் கண்டு களிக்கும்படி எப்பொழுதும் பந்து அடித்து விளையாடுகின்றவளல்லவா நீ. பந்து எழும்பி மேலே வர வரக் கைவிரல்களால் அதை அடித்துக்கொண்டேயிருப்பாயே. அந்த ச்ரமத்தை உன் விரல்களுக்கு நீ தினந்தோறும் கொடுத்துக்கொண்

டிருக்கிறாய். விழித்துக்கொண்டிருக்கும் போதெல்லாம் அனேகமாய் பந்தடித்தே உன் காலம் செல்லுகின்றது. அவ்விதம் அந்த ச்ரமத்தை ஸஹித்துக்கொள்வது போலவே இப்போதும் எங்களுக்காக இந்த ச்ரமத்தைப் பொறுத்துக்கொண்டு நீவந்து கதவைத்திறக்க வேண்டும்' என்று குறிப்பாகக் காட்டி ப்ரார்த்திக்க எண்ணிய நாயகப் பெண் 'பந்தார் விரலீ' என்றழைத்தாள். 'பந்தோடு நித்ய ஸம்பந்தமுள்ள விரல்களையுடையவளே' என்றாள்.

பிறகு 'இப்படி ச்ரமத்தைப் பொறுத்துக்கொண்டாவது நான் எதற்காகக் கதவைத் திறக்க வேண்டும்? ச்ரமப்பட வேண்டியது மாத்திரமன்று. எம்பெருமானை விட்டு விட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து உங்களோடு விளையாடிக்கொண்டிருப்பது நியாயமன்றே. அப்படிச் செய்தால் எனக்கும் புருஷார்த்த ஹாநி. இதற்குக் காரணர்களான படியால் உங்களுக்கும் ப்ரத்யவாயம் வரும். ஆகையால் இந்த ஸமயம் நான் வருவதற்கில்லை. பிறகு பார்த்துக்கொள்ளலாம் போங்கள்' என்றிப்படி சொல்லக்கூடிய நிலையில் பிராட்டி அப்போது இருக்கலாமென்ற ஓர் எண்ணமுண்டாக அதற்கு ஸமாதானமாக மேலுமொன்று கூறினாள்- உன் மைத்துனன் பேர் பாட என்று. நாங்கள் வெறும் விளையாட்டு விளையாடுவதற்காக இங்கு வந்து உன்னை அழைக்கவில்லை. லோகோத்தரனைப் பரம புருஷனை உன் வல்லபனுடைய பேர்பாடவே வந்திருக்கின்றோம். முதலில் உன்னை முன்னிட்டு அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடவேண்டும் பிறகு அவனுடைய திவ்ய குணங்களையும் திவ்ய சரித்ரத்தையும் குறிக்கின்ற திவ்ய நாமங்களைப் பாடிக்கொண்டே அவனுடைய ஆராதனமான நோன்பு கார்யங்களைச் செய்யவேண்டும். ஆகவே அவனுடைய ஸமாராதனம் தவிர மற்ற எந்தக் காரியத்திற்காகவும் நாங்கள் வரவில்லை. உனக்கு வேறு கார்யம், எங்களுக்கு வேறு கார்யமென்பதில்லை. உனக்கு எது கார்யமோ அதுவேதான் எங்களுக்கும். ஆனால் உன்னை முன்னிட்டு உன்னுடைய க்ருபையால் உன்னுடன்கூடவிருந்து அதை நாங்கள் நிறைவேற்ற வேண்டும். ஆகையால் வந்து கதவைத் திற, என்றாளென்றதாயிற்று.

இங்கு உன் மைத்துனன்–உன்னுடைய பர்த்தா என்று எம்பெருமானைக் குறித்தாள். உன்னுடைய புருஷாகார க்ருத்யமில்லாமல் நாங்கள் நேராக பகவானை பஜிக்க முடியாது என்று குறிப்பிட்டாள். முடிவாக ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனை அநுபவிப்பதில் இங்கு நோக்கு. ஸர்வ தேவதாந்தரங்களையும் விலக்கி இதுதான் பரதத்வம் என்று நிச்சயித்துக்காட்டுகின்றதான இந்த ஒரு சிறப்பே இவ்விடத்தில் கூறப்பட்டது. மற்றொன்றையும் அபேக்ஷிக்காமல் இது ஒன்றே ஸர்வேச்வரன் இவன் என்பதை ஸந்தேஹமில்லாமல் காட்டவல்லது என்பது தொனி.

இப்படிப் புருஷகாரமாகப்பிராட்டியை அபேக்ஷித்த நாயகப் பெண்ணின் மனஸ்ஸு ஸம்ஸ்கார விசேஷத்தாலே பிராட்டியின் திவ்ய ரூபத்தையும் கருணா கடாக்ஷத்தையும் அப்படியே தத்ரூபமாக ஸாக்ஷாத்கரித்தது.

स्वाभिमतानुरूपैकरूपाचिन्त्यदिव्याद्भुतनित्यनिरवद्यनिरतिशयौज्ज्वल्यसौन्दर्यसौगन्ध्यसौकुमार्यलावण्ययौवनाद्यनन्तगुणनिधि யான அந்த ரூபம் முழுவதும் அப்படியே அவளுடைய மனக்கண் முன்னே தோன்றி நின்றது. பரவசையாய் அநுபவித்தாள். பிறகு ஒன்றிரண்டு க்ஷணம் கழிந்து தன் ஸ்மரணம் உண்டான போதும் தொடர்ந்து வந்த அந்த அநுபவத்தையே ப்ரக்ருதத்தில் நடக்கவேண்டிய கார்யத்திற்குத் தக்கபடி வைத்துப் பேசினாள்—

சேந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்து என்று. பிராட்டி படுக்கையிலிருந்து எழுந்து நடந்து வந்து கதவைத் திறக்கவேண்டுமென்கிற ப்ரார்த்தனம் ப்ரக்ருதம். இதில் வந்து என்றது மெதுவாகப் பதவிந்யாஸம் பண்ணி ஹம்ஸகதியாலே ஸஞ்சரிக்கக்கூடிய அவளுடைய திவ்ய சரணாரவிந்தங்களின் அழகை அநுபவித்ததைக் காட்டுகின்றது மகிழ்ந்து என்பது ஆச்ரிதர்களின் மேல் குளிர்ந்த திவ்யகடாக்ஷங்களை வர்ஷிக்கிற விசாலமான திருக்கண்களை யுடையதாய் அபார அன்பினால் மிகவும் மலர்ந்திருப்பதுமான திருமுக மண்டலத்தின் அநுபவத்தைக் காட்டுகின்றது. சேந்தாமரைக் கையால் என்றது திருமேனியின் மற்ற பாகத்தின் அழகை அநுபவித்ததைக்காட்டுகின்றது. இங்குக்கூறிய செந்தாமரைச் சிறப்பு திருவடிகளிலும் திருமுகமண்டலத்திலும் அந்வயிக்கின்றது குறிப்பாகத்தோன்றும். திருக்கைகளின்சீரார்வளைகள்

திருவடிகளின் சீரார்பாடகங்களையும் மற்றஅவயவயகளில் அணியப்பெற்ற, சீரார் ஆபரணங்களையும் குறிக்கின்றன. அப்படியே கதவைத் திறக்கும் போது இவை ஒலிப்பது, நடக்கும் போது பாடகங்கள் ஒலிப்பதையும் அன்போடு வறவேற்று க்ஷேமம் விசாரிக்கும்போது வாய் ஒலிப்பதையும் குறிக்கின்றது.

‘அந்த ஆபரணங்கள் என்ன பாக்யம் பெற்றனவோ. பிராட்டியினுடைய திவ்ய அவயவங்களில் இருக்கின்றனவே’ என்று கொண்டாடிச் ‘சீரார்’ என்றாள். பிராட்டி வளைகளின் ஒலியும் இவளுக்கு அனுபவிக்கவேண்டிய விஷயம். ஏனெனில் அது எம்பெருமானுக்கு மிகவும் போக்யமானது.

त्वत्प्रेयसः श्रवणयोरमृतायमानां
तुल्यां त्वदीयमणिनूपुरशिञ्जितानाम् ।

‘உன்னுடைய பாதஸரங்களின் ஒலி எப்படி உன் காந்தனுடைய செவிகளுக்கு அம்ருதமாயிருக்கின்றதோ அப்படியே அவற்றுக்கு அம்ருதமாயிருந்து அதனால் உன் பாதஸர ஒலியின் ஸாம்யத்தைப்பெறும் வாக்கை எனக்குத் தந்தருளவேணும் நீ’ என்றது கவிஸிம்ஹம். சேதனவர்க்கங்களைக் காப்பற்றுவதற்காகப் பிராட்டிப்ரவர்த்தித்துத்தகுந்த கார்யங்களைச்செய்வதில் அவ்வளவு உகப்பு எம்பெருமானுக்கு. அதனால் அந்த ஸமயங்களில் உண்டாகும் ஆபரணத்வனிகள் அவனுக்கு மிகவும் போக்யமாகின்றன. அவனுக்கு போக்யமாகின்றதெல்லாம் அடியார்களுக்கும் போக்யம். ஆகையால் அதையும் அனுபவிக்க நாயகப் பெண் ஆசைப்பட்டாள்.

19. குத்துவிளக்கு

பிராட்டியின் திவ்ய ரூப அநுபவத்தில் ஆழ்ந்த கோபகுமாரிகள் க்ரமமாகக் கதவு திறக்கப்படுமென்று எதிர்பார்த்துச் சிறிது காலம் காத்திருந்தார்கள். ஆனால் அது திறக்கப்படவில்லை. பிராட்டி உள்ளே என்ன செய்கின்றாள்? கதவைத்திறக்க எழுந்து வந்துகொண்டிருக்கின்றாளா? அல்லது எம்பெருமான் திருக்கண் விழித்த உடனே பார்ப்பதற்காக உள்ளே நிலைக் கண்ணாடிகளைத்துடைத்து நிர்மலமாக வைப்பதுபோன்ற கார்யங்களைச்செய்ய ஆரம்பித்து அந்த க்ஷணத்தில் செய்துகொண்டிருக்கும் காரியத்தை முடித்துவிட்டு வந்து திறக்கலாமென்றிருக்கின்றாளா? என்றிப்படி உள்ளே நடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளமுடியாமல் பலவாறு சிந்தித்தார்கள். அப்போது பலபெண்கள் கதவின் அருகே ஓடி அதன் சந்தினால் உள்ளே பார்க்க முயன்றார்கள். அவர்களைத் தடுத்து நாயகப்பெண் இவ்வாறு கூறினாள்—‘நீங்கள் செய்வது நியாயமன்று. விவாஹமாகாத கன்னிகளான நமது தோழிகள் தனியே படுத்திருப்பார்களாதலின் அவர்களுடைய படுக்கை யறைகளில் உள்ளே இப்படிக் கதவு முதலியவற்றின் சந்தினால் பார்ப்பதில் குற்றமொன்றுமில்லை. தம்பதிகள் ஏகாந்தமென்று கருதி சங்கையொன்றுமிராமல் தமது விருப்பப்படி கலந்திருக்கக்கூடிய விடங்களில் அப்படிச் செய்வது பெருங் குற்றமாகும். இந்த திவ்ய தம்பதிகளிடத்திலும் ராஜோபசார முறையைப் பின்பற்ற வேண்டுமாகையால் பரிஹாஸத்திற்காகவும் நாம் இப்போது உள்ளே பார்ப்பது தகாது. ஆகையால் எல்லோரும் ஒழுங்காக நில்லுங்கள். மறுபடியும் எழுப்புவோம். கதவு திறக்கும் வரையில் பொறுமையுடன் இருந்து எழுப்புவதைத் தவிர வேறொன்றும் நாம் செய்வதற்கில்லை’—என்று.

இதைக் கேட்டு உள்ளே பார்த்த பெண்களில் ஒருத்தி ‘நீ சொல்வதெல்லாம் நியாயம்தான். ஆனால் ஒரு விஷயம். நாங்கள் உள்ளே கூர்ந்து பார்த்தோமே யன்றி ஒன்றும் தெரியவில்லை. ஒரே இருட்டாகத்தான் இருந்தது. நாங்கள் பார்த்ததும் நீ பாராமலிருந்ததும் ஒன்றுதான்’ என்றாள். மற்றொருத்தி ‘கதவின் சந்தினால் பார்த்தால் உள்ளே ஒன்றும் தெரியாதபடி மறைவு ஏதாவது வைக்கப்பட்டிருக்கும். அதனால் உள் புறத்திலுள்ளது ஏதும் புலப்பட ஹேதுவில்லாமலிருக்கும்’ என்றாள். அதன்மேல் நாயகப் பெண் ‘ஆம், அது உண்மையான விஷயம். சிறு தம்பதிகள் சயநக்ருஹத்திற்குள் சென்றார்கள் என்றால் உடனே தோழிகள் உள்ளே நடப்பனவற்றைத் தெரிந்துகொள்ளப் பலவிதமாக முயல்வார்கள். முயன்று தெரிந்துகொண்டவிஷயத்தைப் பஹிரங்கமாகச் சொல்லிப் பிறகு பரிஹாஸம் செய்வார்கள். இதற்காக உள்ளே சென்ற பெண்கள் கதவு மூடிய மறுக்ஷணம் எங்கெங்கு சந்து இருக்கிறதென்று பார்த்து அதையெல்லாம் மறைத்துவிட்டு அதன் பிறகே படுக்கைக்குப் போவார்கள். நப்பின்னைப் பிராட்டியும் தனது தோழிகளிடம் பயந்து அவ்வாறேசெய்திருக்கக் கூடும். ஆனால் அவள் எப்படிச்செய்திருந்தாலும் நாம் உள்ளே பார்ப்பது அபசாரமாகும். பார்க்கக்கூடாது’ என்றாள். இப்படி

நாயகப்பெண் தனது தோழிகளிடத்தில்பேசிக் கொண்டிருந்தாலும் அவளுடைய மனது 'ஏன் பிராட்டி வந்து கதவைத் திறக்கவில்லை' என்பதைப்பற்றி ஆராய்ந்துகொண்டேயிருந்தது.

'படுக்கையை விட்டு எழுந்திருக்கவேண்டிய ஸமயம் வந்துவிட்டபடியால் பிராட்டி விழித்தெழுந்திருக்கவேண்டும். பர்த்தா படுத்த பிறகு படுத்து அவர் எழுவதற்கு முன்பே எழவேண்டியது பத்னிகளின் கடமையாதலால் ஸ்ரீக்ருஷ்ணன் எழுவதற்கு முன்னேயே எழுந்திருந்து அவர் எழுந்தவுடனே செய்யவேண்டிய சுச்ரூஷைகளுக்குத் தகுந்த காரியங்களைச் செய்துகொண்டிருக்கவேண்டும். ஆகையால் அவளை நாம் எழுப்புவோம். அவள் வந்து கதவைத் திறப்பாள். நாம் எம்பெருமானை ஸேவிக்கலாம்' என்று எண்ணினோம். இப்படி எண்ணியது உசிதமா? தர்ம சாஸ்த்ர முறையில் பத்னி பர்த்தாவுக்குமுன் எழுந்திருக்கவேண்டியது நியாயம்தான். ஆகிலும் பரஸ்பர ப்ரேம பரவசர்களான சிறு தம்பதிகளிடத்தில் அவ்விதமாகவே எல்லாம் நடக்குமென்று ஊஹிப்பது உசிதமன்று. பெண்ணுக்கே கணவனை விட்டுப் பிரிய மனமில்லாமலிருக்கலாம். பிறர்க்குப் பயந்து இவள் சீக்கிரமே எழுந்துவிட எண்ணினாலும் பர்த்தா இவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு எழவொட்டாமல் பண்ணலாம். மனிதராக நடிக்கின்ற இந்தத் திவ்ய தம்பதிகளின் விஷயமும் தத்காலம் இவ்வாறு இருக்கலாம். இதை ஆலோசிக்காமல் நாம் அவஸரப்பட்டு நப்பின்னைப் பிராட்டியை எழுப்பினோம். ஒரு நொடிப் பொழுதும் எம்பெருமானை விட்டுத் தனியே இருப்பதை ஸஹிக்கக்கூடிய தன்மையிராத பிராட்டி எம்பெருமான் சயனித்திருக்கத் தனியே ஏதோ செய்துகொண்டிருப்பதாக நாம் எண்ணியது பெரும் தவறாகலாம். அது தவிர பிராட்டியைக் கூப்பிட்டு நாம் கதவைத் திறக்கச் சொன்னோமே. அதுவும் கூடாத காரியமாயிருக்கலாம். எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் எல்லாப் பெருமையும் ஸமமாகவே இருந்தாலும் புருஷன் என்ற முறையில் எம்பெருமான் ஸ்வதந்திரனாயிருப்பதென்றும் ஸ்திரி என்ற முறையில் பிராட்டி அவனுக்குப் பரதந்த்ரையாய் அதாவது அவனுக்கு அடங்கி அவனுடைய விருப்பப்படியே எல்லாம் செய்பவளாக இருப்பதென்றும் அவர்களுக்குள் சாச்வதமான ஏற்பாடுஒன்றிருக்கிறது. அதன்படி அவள் எம்பெருமானுடைய திருவுள்ளத்தை அறியாமல் நாம் அழைத்த உடனே வந்து கதவைத் திறப்பது நியாயமன்று. இதை உணராமல் நாம் 'வந்து கதவைத் திற' என்று ப்ரார்த்தித்ததும் தவறாயிருக்கலாம்' என்றிப்படியெல்லாம் அவள் மனம் சிந்தித்தது. பிறகு முடிவாகத்திவ்யதம்பதிகள் அந்யோந்ய ப்ரேமாதிசயத்தினால் காடாலிங்கனத்தில் இருப்பதாகவே கொள்ளவேண்டுமென்றும் எம்பெருமானுடைய அநுமதியைப் பெற்று வந்து கதவைத் திறக்கும்படிப் பிராட்டியைப் பிரார்த்திக்கவேண்டுமென்றும் தீர்மானித்தாள்.

எம்பெருமானுடைய வைபவத்தையும், பிராட்டியினுடைய வைபவத்தையும் தனித்தனியே அநுபவித்தாலே பக்தர்களுடைய நெஞ்சு உருகி தத்தளிக்கும். சேர்க்கையில் இருவருடைய அழகையும் அநுபவிக்கப் புகுந்தால் அவர்கள் படும் பாட்டை வர்ணிப்பது இயலாத காரியம். ஆகவே நாயகப் பெண்ணின் மனது அவர்களைச் சேர்த்து அநுபவிப்பதில் ஆழ்ந்து, 'சேர்க்கையைப் பற்றிய எந்தெந்த விஷயத்தைச் சித்திரிப்பது? எந்த வரிசையில் காண்பது?' என்றிவ்வாறு ஆலோசிக்கத் தொடங்கிற்று. இவர்களுடைய பிறப்பு, வளர்ச்சி, விவாஹம், இவற்றைப்பற்றி எல்லாம் பேசலாம். ஆனால் இப்போது விரிவு செய்வதற்கில்லை. 'நந்தகோபாலன் மறுமகளே' என்று முன் அழைத்ததாலேயே அவை ஒருவாறு குறிக்கப்பட்டவையாகவும் ஆகின்றன. ஆகையால் சயனக்ருஹத்தில்நடப்பதைப்பேசலாமென்று தோன்றிற்று. நந்தகோபருடையவும் யசோதையினுடையவும்பராமரிப்பில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பள்ளியறை வெகு அழகாக அமைக்கப்பட்டிருந்தது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அதற்குரிய ஸர்வ அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன. பெரியோர்களுடைய கட்டளையேயன்றி எம்பெருமானிடத்தில் தங்களுக்குள்ள பக்தி ச்ரத்தைகளினால் வெகு உத்ஸாஹம் கொண்ட வேலைக்காரர்கள் கழுவவேண்டியவற்றைக் கழுவியும் துடைக்கவேண்டியவற்றைத் துடைத்தும் அங்குள்ள எல்லாவற்றையும் பளபளவென்று ப்ரகாசிக்கும்படிச் செய்து வைத்தனர். ஸ்ரீ கிருஷ்ணனுக்காகத்தேவேந்திரன்முதலியோர் கொடுத்த கட்டில்கள், அரசர்களும் பந்துக்களும் கொடுத்த கட்டில்கள். நந்தகோபர் தானே உயர்ந்த வேலைக்காரர்களை அமர்த்தி செய்யச்சொன்ன கட்டில்கள், எல்லாவற்றையும்

(தொடரும்)

ஸ்ரீ:

அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் எம்பெருமான்

நாராயணனுடைய பரத்வத்தை வேதம் ஸாதித்துக் கொடுக்கிறது. அதன் ஸ்வரூபம் கருடன். அவருடைய அவதாரம் பெரியாழ்வார். பூமிப்பிராட்டியாகிய ஆண்டாள் அவர் பெண்ணாக வளர்ந்தாள். பெரியாழ்வார் திருமொழி வேதவாக்கு. பெரியாழ்வார் பெருமையை அங்கங்கே ஆண்டாள் குறிப்பிட்டுப் போவது இவள் நூல்களைக் கற்போருக்கு நன்கு விளங்கும். இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கும் ப்ரயோகம் அவைகளில் ஒன்றாகும்.

ஆறாவது அறிவான பகுத்தறிவையுடைய மனிதன் முதலான ஸ்ருஷ்டிவர்க்கங்கள் மட்டுமே நல்லது கெட்டதுகளை ஆராய்ந்து செய்யவும் விடவும் வல்லவர்கள் என்றும், அதனால் அவர்கள் செயல்கள் புண்ணியச்செயல்களாகவும் பாபச்செயல்களாகவும் வேறுபாடுற்றனவாய்ப் புண்யலோகங்களிலும் பாபலோகங்களிலும் பயனை அநுபவிக்கும்படி அந்தந்த ஜீவனை இந்தக் கர்மாக்களே நடத்திச் செல்கின்றன என்பதும் சாஸ்த்ரங்கள் கண்ட முடிவாகும். இத்தகைய செயல்களுக்கேதுவான நியமனநிலையும் சொற்களுங் கூடப் பாபபுண்யங்களாகப் பயன் தருவன.

'நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதி அல்லாதன செய்தும் துஞ்சினார்
செல்லும் தொன்னெறி கேட்டே துளங்கினேன்' (பெரிய திருமொழி 1-6-7)

என்னும் ஒரு வாக்கியத்தில் திருமங்கைமன்னன் பாபபுண்யங்களையும் அவை மனமொத்த செயல்களால் நிகழ்வதையும், அவைகளைச் செய்தோர் அடையும் கதிகளையும், அவைகளைத் தான் கேட்டவுடன் தனக்குண்டானவுணர்ச்சிகளையும் ஒருசேர விளக்கியுள்ளார்.

(இ-ள்) நீதி- வேதசாஸ்த்ரங்கள் விதிகளென்று வகுத்துரைத்தவைகளை, நெஞ்சினால் நினைந்தும்- மனத்தால் எண்ணியும், வாயினால் மொழிந்தும்- வாயினால் பேசியும், செய்தும்- கரணங்களால் செய்து முடித்தும், துஞ்சினார்- இறந்தவர்கள், செல்லும்- போகும், தொல்- பழமையான, நெறி- புண்யலோகப்ராப்திகளை, கேட்டு- சாஸ்த்ரவாயிலாகவும் பெரியோர்களிடத்தும் தெரிந்துகொண்டு, துளங்கினேன்- நீதிகளைத் தான் நினைக்கவும் பேசவும் செய்யவும் வேண்டுமென்று தெளிவடைந்தேன். அதுபோலவே, அல்லாதன- நீதியல்லாதவையான பாபங்களை, நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் செய்தும், துஞ்சினார்- இறந்தவர்கள், செல்லும்- போயடையும், தொல் நெறி- பழமையான நரகாதிகளின் விவரங்களை, கேட்டு- தெரிந்துகொண்டு, துளங்கினேன்- நடுங்கினேன் என்பது.

இந்த விதிநிஷேதங்களெல்லாம் சேதனர்களாகிய மனுஷ்யாதி ஸ்ருஷ்டிவர்க்கங்களுக்குத் தான் என்பது சாஸ்த்ரங்களின் முடிவாயினும் அசேதனவஸ்துக்களுக்கும் பாபங்களும் அவைகளின் பயனாகப் பாபிகளுடன் ஸம்பந்தப்படும் நெறியும் உண்டோ என்று வேதபுருஷனாகிய பெரியாழ்வார் சங்கை பண்ணுகிறார்:-

'நரகநாசனை நாவிற்கொண்டழையாத
மானிடசாதியார்
பருகு நீரும் உடுக்கும் கூறையும் பாவஞ்
செய்தன தான் கொலோ'

(பெரியாழ்வார் திருமொழி 4-4-4) என்று.

மனத்தையும் செயலையும் திருத்தியமைத்துக் கொள்ளுதல் மிகக் கஷ்டமான கார்யங்கள். அவற்றை முறையே யோகசாஸ்த்ரங்களும் ஸம்ருதிகளில் ஆசாரகாண்டங்களும் பலபடியாக விரித்துரைப்பன. சொல்லையென்றாலோ யாதொரு முன்பின் ஸாதகமுமின்றி இலேசாகச் சொல்லிவிடலாம். மானிடஜாதியிற்பிறந்தும் இதைக்கூடச் செய்யாதவர் மஹாபாபிகள் தானென்பதில் வேதபுருஷனுக்குச் சிறிதும் ஸந்தேஹமில்லை. ஆனதால் ஆற்றிலோடும் பெருவெள்ளத்தில் இத்தகையார் அள்ளிக்குடிக்

கும் இரண்டு கை நீர் மட்டிலும் 40 கஜக்கச்சை யில் இவர் வாங்கியுடுத்தும் 2 கஜக் கச்சையும் கூட ஏதோ பாபங்களைச் செய்து அவைகளின் பயனாக இவர் வயிற்றிலும், இடுப்பிலும் ஏறின வோவென்பது வேதபுருஷனது ஸந்தேஹம். இதைத் தொடர்ந்து.—

'நேமிசேர் தடங்கையினானை நினைக்கிலாவலி
நெஞ்சுடைப்
பூமிபாரங்கள் உண்ணும் சோற்றினை வாங்
கிப் புல்லைத் திணிமினே'
(பெரியாழ்வார் திருமொழி 4-4-5)

என்கிறார். பாபிகள் பூமிக்கு பாரமாயிருப்ப வர்கள் என்பது ப்ரஸித்தமாகையால் சக்கரக் கையனை நினைக்காதவர்கள் வன்னெஞ்சர்களென் றும், பாபிகளென்றும் தேவ மனிதர்களுக்கு ஒருங்கே நல்லாஹாரமாகக்கூடிய சோறு இவர் வயிற்றிற்போனால் அதுவும் பாபம் செய்ததா குமேயென்று அந்தச் சோற்றுக்குப் பரிந்து அதை வாங்கிக்காப்பாற்றி மிருகங்களின் உண வான புல்லைத் திணிக்கும்படி விரும்புகிறார். இவைகளைத் தொண்டரடிப்பொடி யாழ்வாரி டத்தில் கற்கச் சென்றால் அரங்கமென்னும் ஊர்ப்பெயரைச் சொன்னாலே போதும்; நினைக் கக் கூட வேண்டாம். என்னை!

'அறிவிலாமனிசரெல்லாமரங்கமென்றழைப்
பராகில்,
பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்
தழியுமன்றே'
(திருமாலை 13)

'அண்டர்கோனமரும் சோலையணிதிருவரங்
கமென்னா,
மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி
நாய்க்கிடுமினீரே'
(திருமாலை 14)

இங்கே நாய்க்கிடச்சொன்னது அந்தச் சோற் றுக்குப் பரம உபகாரம் நாயின் வயிற்றுட் போய் அந்தச் சோறு ஜீர்ணமாகி விச்வாஸமா கப்பரிணமிக்கும். அரங்கத்தின் பேரைக்கூடச் சொல்லாத பாபி வயிற்றில் அது போகாமல் பாய்ந்து விலக்கி நாய்க்கிட்டு அந்தச் சோறு புண்ணியமான விச்வாஸமாகப் பரிணமிக்க உதவவேணுமென்கிறார்.

ஆண்டாளுடைய திவ்யஸூக்தியில் அம்ப ரம் தண்ணீர் சோறு இம் மூன்றும் (பெரியாழ் வார், பாபிகளுடைய ஸம்பந்தத்தால் இவை களும் பாபம் செய்தனவோ வென்று சங்கிக் கும் இவையே) அறம் செய்கின்றன என்கிறாள். கண்ணன் ஆயர்பாடிக்கு வந்தது முதல் ஆயர் பாடியிலுள்ள பஞ்சலக்ஷம் குடிகளும் கண்ண னுடைய நினைவும் அவனுடைய நாமோச்சார ணமும் அவன் திவ்யமங்களவிக்ரஹஸேவையும் உடையவராய் அவன்லீலைகளில் மண்டியுமிருக் கிறார்கள். அதனால் இவர்கள் உடுத்தும் வஸ்த் ரங்களும் பருகும் நீரும் உண்ணும் சோறும் நிச்சயமாகப் புண்யம் செய்து வருகின்றன வென்று நிகழ்காலத்தில் பேசுகிறாள். அம்பரம் தண்ணீர் சோறு எழுவாயாகவும், அறம் செய் யும் என்னும் வினை முதலாகவும் அமைந்திருப் பதால் இவைகளைச் செயப்படுபொருள்களாக்கி யோ கருவிப்பொருளிலோ பொருள்கொள்ளத் தமிழ்மொழி வடமொழியிலக்கணங்கள் இரண் டுமே இடந்தராவாதலின், இவைகளை நந்தகோ பாலன் சிறப்பைக் கூறும் சொற்களாகவே கொண்டு நீர் கண்ணனைப் பெற்று வ்ரஜத்துக் குத் தந்த பிறகு இங்குள்ள அசேதனப் பொருள்களும் கண்ணனிடத்தில் நிஷ்டரான வர்கள் ஸம்பந்தத்தால் புண்ணியத்தையே செய்கின்றனவென்று பொருள் கொள்ளற்பா லது. இவைகள் மூன்றும் அறஞ்செய்கின்றன வென்பது சொற்றொடரமைப்பு. 'ஏ' வியப்பு. பெரியாழ்வார், எந்தப் பொருள்கள் பாபஞ் செய்தனவோவென்று சங்கைகொள்ளுகிறாரோ அவைகளே வ்ரஜத்தில் புண்ணியம் செய்து கொண்டேயிருக்கின்றனவென்று ஐயப்பாடு நீங்க உறுதிப்பாட்டால் பேசுகிறாள். விரிக்கிற் பெருகுமாதலின் விரமிக்கிறோம்.

ஸ்ரீ:

குருகுலஸல்லாபம்

[நவீனகலாசாலை மாணுக்கனுக்கும் ஓர் குருகுலவித்யார்த்திக்கும் நடந்த ஸம்வாதம்]

ஸம்பத்:— தேசிக! ஒரு ஸம்சயம் எனக்கு உண்டாகிறது. நம் பூர்வாசார்யர்கள் விஷயமாக உள்ள அநுஸந்தானப்பாசுரங்களில் சில தப்புகள் நேர்ந்துவிடுகின்றன. பெரியோர்கள் வழக்கமாக வந்தது என்று அநுஸந்திக்கிறார்கள், இதுகளைக்கேட்டும் நமக்கு ஸம்ப்ரதாயத்தில் விச்வாஸம் குறைந்துவிடுகிறது. இவைகளையெல்லாம் சீர்திருத்தி ஸரியான பாடங்களையே அநுஸந்திக்கும்படி பெரியோர்கள் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமென்று தோன்றுகிறது.

தேசிகன்:— (வித்யாலயமாணுக்கன்) என்ன தவறுதல்களை நீ கண்டுவிட்டாய்? அப்படி ஏதாவது தவறுதலாக உனக்குப்பட்டால் அதற்கு வேறு முக்கிய பொருள் இருக்கத்தான் செய்யும். உன்னால் அந்த பொருள் அறியப்பட்டிருக்காது. பெரியோர்களிடம் சென்று ஸம்சயத்தைக்கேட்டால் தக்க பதில்சொல்லித் தெளிவிப்பார்கள். ஆமாம், நீ இப்பொழுது எதை மனத்திற்கொண்டு அம்மாதிரி சொல்கிறாய்? உனக்கு ஏதாவது தவறுகள் தோன்றிற்று? அதை சொல் பார்க்கலாம்.

ஸம்பத்:— அப்படியா! மிக ஸந்தோஷம். ஒரு சிறியவிஷயம் கேள். ஆண்டாளுடைய திருவவதாரகாலம் கலி 98-ம் வருஷத்தில் என்பதும் ஸ்ரீபாஷ்யகாரர் திருவவதாரகாலம் கலி 4119-ம்வருஷத்தில் என்பதும் குருபரம்பரைகளிலும், சரித்திரங்களிலும் மிக ப்ரஸித்தம். அப்படியிருக்க ஆண்டாள் வாழித்திருநாமப் பாட்டில் "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்று பாடியிருக்கிறது. அப்படியே பண்டிதபாமரர்கள் அனைவரும் அநுஸந்தித்துவருகிறோம். இது எப்படிப் பொருந்தும்? இதை மாற்றி அநுஸந்திக்கவேண்டியது அவசியமல்லவா? இம்மாதிரி சிறு பிழைகளைக் கொண்டே நாஸ்திகர்கள் முழுமையும் பிழையென்று சொல்லுகிறார்கள். இதற்கு ஸமாதானம் என்ன சொல்வது? உட்கருத்து வேறு என்ன இருக்கிறது?

தேசிகன்:— ஓஹோ! அப்படியா! நானும் நினைத்தேன். நீ பெரியோர்பக்கல் பழகினவனில்லை. ஏதோ ஏட்டில் படித்து பண்டிதனாக எண்ணி குதர்க்கத்தில் இறங்கி கலங்கியிருக்கிறாய். அதன் பொருளை நான் பெரியோரிடத்தில் கேட்டறிந்தபடி சொல்கிறேன். அதைக்கேட்டபின்பும் ஸம்சயமிருந்தால்வேறு பெரியோரிடம் கேட்கலாம். கவனமாகக்கேள். ஆண்டாள் அருளிச்செய்த "நாச்சியார் திருமொழி" என்னும் ப்ரபந்தத்தில்,

"நாறுநறும்பொழில்மாலிருஞ்சோலைநம்பிக்கு-
நூறுதடாவில்வெண்ணெய்வாய்நேர்ந்து [நான் பராவிவைத்தேன்,
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்றுவந்திவைகொள்ளுங் கோலோ"

என்னும் பாசுரமுளது. அதற்குப்பெரியோர் கூறும் பொருள்:— ஆண்டாள் திருமாலிருஞ்சோலையில் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்கிறாள் இப்பாட்டால். அப்போது அவனது ரூபௌதார்யஸௌந்தர்யாதிகுணங்களை அநுபவித்து உபகாரமாக என்ன ஸமர்ப்பிக்கலாமென்று எண்ணமிடுகிறாள். உலகில் ஸாதாரண மனிதர்களைக் காணச்சென்றால் அவரவர்கள் யோக்யதைக்குத்தக்கபடி பழம், பக்ஷ்யம், பட்டு முதலியவற்றை எடுத்துக்கொண்டு சென்று காண்பது இயல்பு. அதிலும் ஸர்வோத்தமனான பகவானை மங்களாசாஸனம் செய்யும்போது அவனது ஸர்வேச்வரத்வத்திற்குத்தக்கபடி ஸர்வோத்தமமான உபஹாரம் எதை ஸமர்ப்பிக்கலாமென்று பார்க்கிறாள். கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெயாகையால்நூறு தடாக்கள்நிறைய வெண்ணெயையும், திருப்பாவையில் கூடாரையில் கூடியிருந்து குளிர்ந்துண்ண விரும்பியது "மூடநெய்பெய்த

பாற்சோறு'' தானுகையால் அதையும் ஸமர்ப்பிக்க எண்ணினுள். அதில் எவ்வளவு ஸமர்ப்பிப்பது என்று அளவுகோலி, அவனது குணங்களுக்கேற்ப ,,நூறுதடா'' ஸமர்ப்பிக்கவேண்டுமென்று எண்ணுகிறுள். பின்பு தன் சக்தியை நோக்குகிறுள். ஒரு தடாவிற்கு வழியில்லை. யோசித்து மானஸிகமாக 'நூறுதடா அக்காரவடிசல் சொன்னேன்'' என்று ஸமர்ப்பிக்கிறுளென்பது.

உலகில் ஸ்த்ரீகள் விரும்பும் பொருள்களை ஸஹோதரர்கள் கொடுத்து த்ருப்தி செய்வது வழக்கமல்லவா, அதிலும் தம்பிகளைவிட தமையனுயிருப்பவர் அதிகபொருப்பாக இருப்பார்களாகையால் அவர்கள்மூலமாக அபேக்ஷிதம் நிறைவேறுவதும் வழக்கம். அம்மாதிரி ஆண்டாளுடைய அபேக்ஷிதத்தை பூர்த்திசெய்தவர் ஆண்டாளுக்குத்தமையனுகிருர். காலத்தினுல் பிற்பட்டபோதிலும் கார்யத்தால் முற்பட்டபடியால் ஸ்ரீபாஷ்யகாரரை முற்பட்டவராக்கிப் பின்னுனளாக ஆண்டாளைப் பெரியோர்கள் அநுஸந்திக்கிருர்கள். அதெங்ஙனேயென்னில்:- ஸ்ரீபாஷ்யகாரர் ஆண்டாளருளிச்செயல்களை யநுஸந்தித்துவரும்பொழுது இப்பாட்டை ஆராய்ந்தார். 'நூறுதடா வக்காரவடிசில் ஸமர்ப்பிக்க எண்ணி அதுமாட்டாமல் ஆகிஞ்சந்யத்தினுலன்றோ ,,சொன்னேன்'' என்று மானஸிகமாகச் சொல்லியிருக்கிறுள். நாம் அக்காலத்திலிருந்து உபஹரித்திருக்காதுபோனேமே; இப்போதாகிலும் அவளாசைப்பட்ட வஸ்துவை அவளாசைப்பிரானுக்கு நாம் ஸமர்ப்பிக்கவேண்டும்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு திருமாலிருஞ்சோலை சென்று நூறு தடாக்களில் வெண்ணெயையும் அக்காரவடிசிலேயும் ஸமர்ப்பித்து கோதை திருவுள்ளம் பற்றியதற்காக அமுதுசெய்தருளவேணுமென்று ப்ரார்த்தித்து எம்பெருமானை ஆராதித்தார். ஆகையால் ஆண்டாளாகிய தங்கையின் மனோரதத்தை யறிந்து அதைப் பூர்த்திசெய்வித்ததால் பாஷ்யகாரரைத் தமையனுக்கி ,,பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுனள் வாழியே'' என்று பெரியோர் அநுஸந்திக்கிருர்கள். நீ எண்ணியபடிகாலத்தைக்கணக்கிட்டல்ல. என்! நான் சொல்வதில் ஆக்ஷேபமோ ஸம்சயமோ இருந்தால் தெரிவி. உன் ஸம்சயம் எப்படி இருக்கிறது?

ஸம்பத்:— தேசிக! வெகு அழகாக உள்ளது நீ கூறும் காரணம். நான் ஏதோ தத்வம் தெரியாமல் கலங்கி முதலில் அம்மாதிரி கூறிவிட்டேன். க்ஷமிக்கவும். ஸம்ப்ரதாயார்த்தங்களை ஸதாசார்யர் பக்கல் கேட்டறியாமல் தானே ஏடு பார்த்து ஸர்வஜ்ஞனுக ஆக எண்ணியதால் வந்த அனர்த்தம் தானிது. உனக்கு ஒழிவு இருக்கும் ஸமயங்கள் இருந்து தெரிவித்தால் இம்மாதிரி அநேககலக்கங்களை போக்கிக்கொள்ள உதவியாக இருக்கும். மிகவும் ஸந்தோஷம். இதற்கு எனது நன்றியைத் தெரிவிக்கவேண்டியது அவச்யமல்லவா?

தேசிகன்:— நீ சொல்வது வாஸ்தவம். ஸம்ப்ரதாயார்த்தங்களை நல்லாசிரியர் பக்கலிலே தான் கேட்டறியவேண்டும். எனது ஆசாரியரே வேண்டி கேட்பாருக்கு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்கிறுர். நீ விராமதினங்களில் காலை 9 மணிக்கு வந்தால் என்னோடு அவரிடமே கேட்கலாம். அவரிடம் நான் விஜ்ஞாபித்துவைக்கிறேன். இக்காலத்தில் உன்னைப்போல் உள்ளவர்கள் ஸத்விஷயங்களில் ச்ரத்தையுள்ளவர்களாக இருப்பது ஆச்சர்யமாகவிருக்கிறது. நீ அவசியம் வந்துசேரவும். மிகஸந்தோஷம்.

ஸம்பத்;— தேசிக! அப்படி ஒரு ஸத்ஸங்கம் கிடைக்கும்படி நீ உபகரித்தால் அதுவும் என் பாக்யமேயாகும். இப்போது நாழிகையாகிவிட்டபடியால் நாளை உன்னோடு வந்து உன் ஆசாரியரை ஸேவித்து ப்ரார்த்திக்கிறேன். உனக்கு ச்ரமம் கொடுத்ததுபற்றி க்ஷமிக்கவும்.

ஸ்ரீ:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நாராயணன் போல் அவன் திண்கழலும் உபாஸ்யமும், ப்ராபகமும், ப்ராப்யமுமாகும். அவன் கழலை அநுஸந்திப்பதற்கு அவன் கழலே நித்ய ப்ராப்யப் பேருகுமென்பதை 'சேரே' என்பதால் விளக்குகிருர். 'காரணத்வோபாஸ்யத்வ ப்ராப்யத்வைரேவ ப்ரதா | இதி ஶாரீரக ஶாஸ்த்ரார்த்தோ வ்யவஸ்தித: ||' என்றபடி இப்பாசுரத்தில் பொருள் விளக்கம் செய்யும் திருவஷ்டாக்ஷரத்தில் ஶாரீரகத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டக்ரமத்தில் ப்ரணவத்திலுள்ள முதலெழுத்தினுல் ஜகத்காரணத்வமும், அதிலுள்ள உகாரத்தில் குறிக்கப்படும் ஏவகாரப் பொருளால் அக்காரணத்வத்தின் அனந்யார்ஹத்வமும், 'அவ ரக்ஷணே' என்று பாணினி காட்டியபடி 'அவ' என்னும் தாதுவிற்கு தாதுபாடத்தில் கூறிய ரக்ஷணப்ரீணனம் முதலிய 18-ஈச்வர வ்யாபாரமான மஹிமைகளையுடைமையும், அவனுக்கும் சேதநராசிகளுக்குமுள்ள நித்யமான ஸம்பந்தங்களையும், ஸர்வவித பந்துத்வத்தையும் முதல்பதத்தால் காட்டி, 'காரணத்வோபாஸ்யத்வம்' என்கிற முதலிரண்டு அத்யாய ஸாரத்தை விளக்கி, 'நம:' என்பதால் அஹங்கார மமகாரங்களையும் ஶரீராத்ம புத்தியையும் ஸ்வதந்த்ராத்ம புத்தியையும் தள்ளி 'ஸர்வோபாயவிநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரஹ்மணி ந்யஸேத்' என்றபடிக்கும் 'ப்ரதிரேகஸ்துதாவஹாவித்வாத்' என்கிற ஸூத்ரப்படிக்கும், அடியோடு தன்னை தேஹத்திலிருந்தும், தேஹாநுபந்திகளிடத்திலிருந்தும், அப்ருதக்யோகமென்றும் 'அப்ருதக் ஜ்ஞாநநித்யத்வம், ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:க்கதோஷாநுதர்ஶநம்' என்றும் கூறிய தேஹாத்ம விவேசநாப்யாஸத்தால் தேஹத்திலிருந்து பிரித்து, நித்யஸந்நிஹிதனுயும் நித்யம் தீவ்ராகாங்க்ஷனுயுமிருக்கும் பரமாத்மாவை வணங்கி, 'ஸர்வாஜேவி ப்ராஹ்ருஷ்டா: நம இத்யேவ வாதிந:' என்றபடி நித்யம் தொழுவதென்னும் உபாயத்தை இம்மந்த்ரத்தில் ஹ்ருதயம் என்று சொல்லப்படும் நமஸ்ஸினுல் பூர்ண ஹ்ருதயத்தோடு அநந்யபாவமாய் பஜனம் செய்வதை விளக்கும் 3-ம் அத்யாயத்தையும், அதின் தொடர்ச்சியான 4-ம் அத்யாயத்தின் முதல் பாதத்தின் முற்பாதியையும் விளக்கியதைக் காட்டி, இதற்குப் பலமான முக்தோபஸ்ருப்யனும் முக்தர்களுக்கு பரமகதியும் தன்னிடம் நித்ய லயத்தால் சாச்வத ப்ரஹ்மாநந்தத்தையும் அந்த ஆநந்த பரீவாஹமான கைங்கர்யங்களையும், நித்யமும் சேஷத்வரதியால் தனக்கு ப்ராப்தமான ஸ்வாபாவிக ஸ்வரூபத்தையும் தன்னுயிரின் நித்ய ரக்ஷணத்தையும் பெறுவதைக்காட்டும் மூன்றும் பாதத்தால் பலாத்யாயத்தை ஸூசிக்கிறதென்பது ப்ரஸித்தம். இந்த ஶாரீரகஶாஸ்த்ரம் முழுவதும் இம் மூலமந்த்ரத்தில் மிகத் தெளிவாயும், மிக ரஸமாயும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கப்படுவதால் அந்த ஶாஸ்த்ரத்தின் ஸங்க்ரஹ விளக்கத்தின் முடிவில் மூலமந்த்ரத்தின் பொருளை உரைத்து அதன் மூலமாய் ஶாரீரக ஶாஸ்த்ரம் முழுவதையும் இப்பாசுரத்தில் ஸங்க்ரஹிக்கும் ரஸம் ரஸிக்கத் தக்கது. நாராயணன் என்று இம்மந்த்ரத்தை உபதேசித்த ஆசார்யரான பதரிகாச்ரம தாபஸரைக் குறிப்பதால் அந்த ஆசார்ய ஸ்மரண கீர்த்தனங்களோடு ஸங்க்ரஹத்தை உபஸம்ஹரிக்கிருர். ஶாரீரக ஶாஸ்த்ர கர்த்தாவான பாதராயணரும் நாராயணனுடைய அம்சாவதாரம். அவர் திருநாம கீர்த்தனமும் ஸித்திக்கிறது. 'ஸாக்ஷாந்நாராயணோ தேவ:' என்றபடி பின்னுள்ள மந்த்ரோபதேஷ்டாக்களான அவரவர்கள் ஆசார்யர்களிடமிருந்து 'குரோர்யோகதும் வக்ஷ்யேயதாம ஸாமக்ரோபாயம்ஜிதம்' என்ற

படி அர்த்தத்துடன் க்ரஹிக்கப்படவேண்டி யதையும் ஸூசிக்கும். ஸூத்ரவாக்யார்த்த திற்கும் வக்தாவான நாராயணனே ஸூசிப்ப தால் பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளெல்லாம் பாத ராயண ஸம்மதமான ப்ரமாண மென்பதை யும் அதிலுள்ள ஆராதன க்ரமங்களும், ப்ர பத்யாதி உபாயோபதேசங்களும் ஶாரீரகஸம் மதமே என்பதையும் ஸூசிக்கிறார். த்வா பரத்தின் முடிவில் கலியுகாரம்பத்தில் பாஞ் சராத்ரம் ஸங்கர்ஷணனால் கானம் செய்யப்பட் டது. பாதராயண ஸூத்ரங்களும் த்வாபரத் தின் முடிவில் ஏற்பட்டன. கலியுகாரம்பத் தில் ஆழ்வாருடைய த்ரமிடோபநிஷத்தும் அதிலுள்ள இந்த ஶாரீரக ஸங்க்ரஹத்திருவாய் மொழிகளும் பாடப்பட்டன. த்வாபர யுகாந் தத்தில் பாரதயுத்தாரம்பத்தில் பாடிய கீதை யில் ஜடமான க்ஷேத்ரங்களும் சேதனரான க்ஷேத்ரஜ்ஞர்களும் எல்லாம் பகவானுக்கு நியாம் யமான ஶரீரம். ஸர்வக்ஷேத்ரங்களிலும் ஸர்வ க்ஷேத்ரஜ்ஞர்களுக்குள்ளுமுள்ள ஸர்வ க்ஷேத்ர ஜ்ஞன் ஈச்வரனென்று விளக்கும் க்ஷேத்ராத் யாயமென்கிற ஶரீர ஶரீரிபாவ விவரணமான 13-வது அத்யாயத்தில் ப்ரதிபாதிக்கப்படும் ஶாரீரகஶாஸ்த்ர ப்ரதான ப்ரதிதந்த்ரத்திற்கு ஆதாரமாக அங்கே 'ருஷிபிர்பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக் । ப்ரஹ்மஸூத்ரபதைச்சைவ ஹேதுமத்பிர்வி நிச்சிதை:' என்று ப்ரஹ்ம ஸூத்ரங்களை யும் ஶாரீரகஶாஸ்த்ரத்திற்கு முக்யாதாரமான அந்தர்யாமி ப்ராஹ்மணங்களையும், பகவானு டைய ஸார்வாத்ம்யத்தையும் சேதனாசேதன விச்வத்தின் ப்ரஹ்மாத்மகத்வத்தையும் திரும் பவும் திரும்பவும் படிக்கும் ஸத்வித்யாதி ஸர்வ ச்ருதிகளையும் பகவான் கூறினார்.

'கழல் சேரே' என்று பாடி உடனே மேலே 'சேர்த்தடம்' என்பதால் கழல் சேர்ந்தால் உடனே தடம் சேர்வாய். தடமென்னும் ஸம்ஸாரத்தின் அக்கரையைச்சேர்வாய் என்று பாடும் ரஸம் ரஸிக்கத்தக்கது. 'கழல் சேர், தடம் சேர்.' கடைசி சதகத்தில் 'திண்ணநாம றியச் சொன்னோம் அநந்தபுரத்தண்ணனார்க் கமலபாதம் நண்ணினார் அமரராவார்' என்று பாடுவது இந்த ரஸக்கருத்திற்குச் சான்றாகும்.

'எண்' என்பது எட்டெனுமெண்ணிக் கையைக் குறிப்பதால் திருவஷ்டாக்ஷரத்தைக் குறிக்கும். இங்கே அம்மந்த்ரத்தின் பொரு ளுரைபால் அதை ஸூசிப்பதுமன்றி, 'எண்' என்ற எண்ணிக்கையைச்சொல்வதாலும் ஶாப் தமாகவே மந்த்ரத்தைக் குறிப்பதாகக் கொள் ளலாம். 'எட்டினோடிரண்டு' என்ற விடத் தில் போல. 'எண்' என்று மனத்தினால் பா வத்தோடு திண் கழலை எண்ணுவதையும் ஸூசிப்பதற்காகவும் எட்டுக்குப் பதிலாகப்ர யோகிக்கப்பட்டது போலும். 'எண் சேர்' என்று முதல் பதத்தையும் கடைசி பதத்தை யும் சேர்த்து கழலின் நிரதிசய ஸௌலப்யத் தை வ்யஞ்ஜநம் செய்கிறார். 'எண்ணினும் வரும் என்னினிவேண்டுவம்' என்று இங்கே கடைசித்திருவாய்மொழியில் பாடப்படுகிறது. எண் என்னும் திருவஷ்டாக்ஷரம் பெருக்கும் (ப்ரபூதமாக ப்ரவஹிக்கச்செய்யும்.) அக்நலத்து வாசாமகோசரமான மஹிமையைப் பெறும். ஒண் பொருள்—ஜ்ஞானி ஜீவர்கள். திருவஷ்டா க்ஷரம் ப்ரவஹிக்கச் செய்யும் எல்லையற்ற நலங் களை 'எட்டுமா மூர்த்தி எண்கணனெண்டிக் கெட்டிறையெண்ப்ரக்ருதி எட்டுமா வரைக ளீன்றவெண் குணத்தோனெட்டெனுமெண் குணமதியோர்க்கு எட்டுமா மலரெண் சித்தி யெண்பத்தியெட்டு யோகாங்கமெண் செல்வம் எட்டுமா குண மெட்டெனுங்கலை யெட்டாத மேலதுவு மெட்டினவே' என்கிற மூலமந்த்ரா திகார முடிவில் பாடிய பாசுரம் அதிரஸமாக விளக்குகிறது. அதற்கு வ்யாக்யானமும் விரி வாக அங்கே ஸ்வாமியாலேயே செய்யப்பட் டது. எட்டை எண்ணுபவர்களுக்கு அஷ்டாங் கமான பக்தி யோகமும், எட்டுமானஸபுஷ் பங்களும், 'மத்பக்தஜநவாத்ஸல்யம்' என்று தொ டங்கி 'ஸ்திராஷ்டவிதா ஹ்யேஷா' என்று கூறிய அஷ்டவித பக்திகளும், அஷ்ட ரஸங்களும், அதற்கப்பாலுள்ள 'ஶாந்திம் நிர்வாண பரமாம் மத்ஸம்ஸ்தாமதிகச்சதி' என்று பாடப்படும் ஶாந்திரஸ பூர்ணமான முக்தியும் கைக்கு எட்

டும். எட்டை எண்ணினல் ஸர்வமும் எட்டா ததெல்லாம் எட்டும். திருவஷ்டாக்ஷரத்தின் எண்ணை விச்வாசார்யரான சிவன் தன் மூர்த்திகளின் ஸங்க்யையாகப் பற்றினர். ‘ஶைவதத்ர நாவத ந்யஷ ஶநாஷ்யாஃ வாஶ ஸவஸ்ஶஃ’ பகவானுக்கு அதிப்ரியமான இம் மூலமந்த்ரத்தின் ஸங்க்யையில் மிக்க ஆதாரம். திக்குகள், திக்பாலகர்கள் முதலியவர்களுமதை ஆதரித்தார்கள். எண் பெருக்கும் நலத்தை ‘யத்ரா ஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே। ந சத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கராஃ’ என்று மஹர்ஷிகள் பாடினர்கள். வ்யாதி—ஸம்ஸார ரோகம். துர்பிக்ஷம்—ஹ்ருத்ய வஸ்துவென்றுபாடிய பக்திப் பஞ்சம். தஸ்கரர் என்பவர் ஆத்மாபஹாரிகள் என்று காட்டப்பட்டுளது. ரிஷிகள் கைகளைத் தூக்கிக் கொண்டு ஸத்யம் செய்து ‘ஹே புத்ரர்களே! ஹே சிஷ்யர்களே! ஸநகாதி முநிகளும் அனந்த மஹாத்மாக்களும் அஷ்டாக்ஷரத்தை ஸமாச்ரயித்து வைஷ்ணவ பதத்தை யடைந்தார்கள்’ என்று உரக்கக் கூப்பிட்டு அருதியிட்டதையும் நினைக்கவேணும்.

11-ம் பாட்டு

சேர்த்தடத்தென்குருகூர்ச்சடகோபன் சொற்
சீர்த்தொடையாயிரத், தோர்த்த விப்பத்தே.

[திருவாய்மொழி-i-2-11]

தடமென்பது பவக்கடலின் அக்கரையைச் சொல்லும். ஸம்ஸாரத்திற்கு பரமான பாரம் ப்ரஹ்மம். ‘தமஸ: பாரமாதித்யவர்ணம் புருஷம்’, ‘ஸோ(அ)த்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்’ முதலிய ச்ருதிகாநங்களைநினைக்கவேணும். அக்கரைச் சேரும் பலத்தை இங்கே முடிவு பாசுரத்தில் ஸங்கீர்த்தனம் செய்கிருர். திருவடியே தடமானதால் திருவடியைப்பற்றினல் தடம் சேர்வது திண்ணம். தடமென்பது தடாகத்தைச் சொல்லும். இதுவரையிலும் காம க்ரோதாக்நிகளாலும் மற்ற ஸம்ஸாராக்நிகளாலும் தபித்துக்கொண்டு ஸந்தப்தாய:பிண்டம் போலே கொதித்து வருந்துபவர் பெருவிடாயர் மடுவிலே விழுமாப்போலென்றபடி ப்ரஹ்மமெனும் சீதமான தடாகத்தில் அமிழ்ந்து ஸகல தாபங்களும் தீரப் பெற்று ‘நிமஜ்ஜதோ(அ)நந்த பவார்ணவாந்த: சசிராய போதோ ஸமஜநிஷ்ட’ என்று முக்தி பெறும் ஜீவன் ப்ரஹ்மமெனும் சீத ப்ரவாஹத்தில் முழுகி திரும்பவும் அதை விட்டு எழுந்திருந்து வெளிப்படுவதில்லை யென்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தின் முடிவில் பாடியபடி மறுபடியும் உந்மஜ்ஜநமில்லாமல் சாச்வதமாய் அந்த சீத தடாகத்திலேயே மக்நனன ஆழ்வாராய் ஆகிருன். இவ்வாழ்வார் தம்மைப் போல நம்மையும் ப்ரஹ்மமெனும் தடத்தில் ஆழ்ந்த ஆழ்வாராகச் செய்து ‘ப்ரஹ்மஸாம்யாவஹஸ்வார்ஸ’ என்கிறபடி தம்மோடு ஸாம்யத்தை அவர் திருவாய்மொழியாகிற த்ராவிட வேத ஸாகரத்தில் ஆழுமவர்க்கு அளிக்கிருர். இப்புகழ் அவருடைய வண்புகழ். நாரணன், தன் கழல் சேர்பவர்க்கு தன்னேடு அத்யந்த ஸாம்யத்தைத் தரும் வண் புகழ் உடையவனுய் இருப்பது போல் ஆழ்வாரும் ‘நீடு புகழ் வண்குருகூர் மாறன்’ என்று அந்தாதியில் பாடியபடி நீடு வண் புகழ் உடையவர். ‘ஸஷ ப்ரஹ்மவித் ஷோட்சவிதி த்ரேஷவிதவஸ்துரம் । ஸாம்யாதி வரிவர்த்தி ஸாவகோ ஸ ஸஸஸ்ஹ ॥’ என்கிற ப்ரமாணத்தை நினைவூட்டுகிருர். ஆழ்வார் எழுந்தருளியிருந்த குருகூரில் ஆழ்வார் பரப்ரஹ்ம தடாகத்தில் ஆழ்ந்து இன்புற்றுக் கொண்டே இருந்தவர். ‘தென்’ என்பது ‘அழகிய’ என்றும், மதுர மென்றும் பொருளுடையது. சுகர் வடசடகோபர். ஆழ்வார் தென்சடகோபர். சுகர் வடமொழி சடகோபர். இவர் தென்மொழி சடகோபர். அவரது, வடசொல். இவரது, தென் சொல். இவருடைய சீர்த் தொடைச் சொல் ஆயிரம் பாசுரங்களும் தடமென்னும் ஸஹஸ்ர ஸ்தூண மண்டபமான திருமாமணி மண்டபத்தின் ஆயிரம் ஸ்தூணங்களாகும். ஆழ்வாருடைய இவ்வாயிரமும் பரமாத்மா இன்புற்று சயனித்திருக்கும் பர்யங்கம்—சய்யை என்று

‘தத்வம் ஸத்வாதயோ குணா: ஸம்ஜ்ஞிதம் வ்யதிஷக்த ஸ்வயம்பூ’ என்றபடி நித்ய யுவாவான பகவானுக்கு நித்ய சயனமான ஶய்யை யாகுமிப்பாற்கடல். இவ்வாயிரத்தில் இப்பத்து தடம் சேர்க்கும் பக்தி யோகத்தையும், தடம் சேர்வதெனும் ப்ரஹ்ம ப்ராப்தியையும் மீமாம்ஸை செய்து ஓர்த்தது என்ற ‘ஓர்த்த விப்பத்தே’ என்பதால் இப்பத்தில் ஸாதந ஸாத்யங்களை ஶாரீரகோத்தரஷட்க ஶோதனக்ரமத்திலே விசாரித்து கரதலாமலகம் போல் தத்வ தர்சனம் செய்விப்பது இப்பத்து என்று கருத்து. ‘ஓர்த்த’ என்பதற்கு மீமாம்ஸித-விசாரித்த-நிரூபித்த என்று பொருள். இதனால் ஆழ்வார் இப்பத்தை ஶாரீரகத்தின் உத்தரத்விகத்தின் மீமாம்ஸையின் ஸங்க்ரஹவிளக்கமாகப் பாடியது நிச்சயமென்று விளக்குகிறது. ‘ஸூக்ஷ்ம ஶாரீரகார்த்தஸ்திதிம் விஶதம் விம்ஶதிவ்யக்திஸாரம்’ என்று ஶாரீரகப் பொருளில் தெளியாத நிலங்களை மாறன் மறையில் இவ்விரண்டு திருவாய்மொழிகளும் தெளியச் செய்கிற தென்பதை ஸ்வாமி அநுபவித்து ஸாதித்தார். மறைநிலங்களுமட்டுமல்ல. ஸூத்ரங்களிலும் தெளியாத நிலங்களைத் தெளிவித்தன என்று ரஸம்.

முற்றிற்று

ஸ்ரீ:

நன்கொடைகள்

இவ் வருஷம் ஸங்கல்ப மஹோத்ஸவத்தன்று ஸ்ரீமதழகியசிங்கரை நேரில் தண்டன் ஸமர்ப்பிவிக்கும் பாக்யம் பலருக்குக் கிடைத்தது. அது ஸமயம் நமது ஆப்தருள் ஒருவரான ஸ்ரீ. உப N. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (பொன்மலை) இப் பாக்யத்தை அடைந்ததோடு ஸுமார் ரூ 120 பொருமான ஓர் வெள்ளித்தட்டை நமது ப்ரதமாசார்யனுன மாலோலனுக்கு ஸமர்ப்பிவித்து க்ருதார்த்தரானுர் என்பதைப்பார்த்து நாம் மிகவும் குதூஹலிக்கிறேம். இம் மாதிரி சிறந்த கைங்கர்யங்களில் பங்குகொள்வதில் அந்த ஸ்வாமி விசேஷ பாக்யம் செய்தவர்.

இரண்டு மாதத்திற்கு முன்பு அந்த ஸ்வாமியே நமது மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலைக்கு ஸ்ரீ விஷ்ணுபுராணமும் நாகரிலிபியில் ஸ்ரீ மஹாபாரதபுராணம் முழுமையும் இனமாகவே வழங்கினுர்.

அந்த ஸ்வாமியின் பாக்யத்தைக் கண்டு நாம் பெருமைப்படுவதுடன் நமதுக்ருதஜ்ஞதையையும் பலகாலும் வெளியிட்டுக்கொள்ளுகிறேம்.

2. இதே ஸமயத்தில் துவரிமானில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் நமது கலாசாலை புஸ்தகசாலை உபயோகத்திற்காக ஸ்ரீ. உப K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ. உப S. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும் பல புஸ்தகங்களை ஸமர்ப்பித்து க்ருதார்த்தர்களானுர்கள். அந்த ஸ்வாமிகளுக்கும் நமது நன்றியை வெகுவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

ஈச்சம்பாடி. தி. ராமஸ்வாமி.

ஸ்ரீ:

மாத்ரு பித்ரு பக்தி

உலகில் மஹநீயர்கள் பலருளர். வித்யை, ஜ்ஞானம், சீலம், ஆசாரம், அநுஷ்டானம் முதலியவை வாய்ந்தவர்களே 'மஹநீயர்' எனப்படுவர். அவர்கள் விஷயத்தில் உண்டாகும் ப்ரீதியே 'பக்தி' என்று வழங்கப்படும். இவர்களுடைய மஹநீயத்வம் ஸோபாதிகம். மாதா பிதா ஆசார்யர்கள் என்னும் இம்மூவரிடம் காட்டப்படும் பக்தி நிருபாதிகம். பக்தி ஒன்றே, ஸம்ஸாரத்துக்குக் காரணமாக இருக்கிற இருவினைகளை அறுத்து அழிவற்ற ஸுகத்தைத் தருவதற்கு இன்றியமையாத ஸாதனம். பக்தர்களின் கோரிக்கைக்குத் தக்கவண்ணம், பக்தியானது விஷய பேதத்தால் பற்பல பயன்களை அளிக்கிறது. மாதா, பிதா, ஆசார்யன் திறத்தில் செய்யப்படும் பக்தியோவென்றால், இம்மையில் நிகரற்ற ஸுகத்தையும் மறுமையில் நிச்ரேயஸ் என்று சொல்லப்படும் மோக்ஷ ஸுகத்தையும் தவறாமல் கொடுக்கவல்லது. மாதாவும் பிதாவும் புத்ரரக்ஷணத்தில்ஸமமான ஊக்கமுடையவர்களாக இருந்தபோதிலும், பிதாவைவிட புத்ர விஷயத்தில் மாதாவே அதிக பொறுப்பு வாய்ந்தவளாக இருக்கிறாள். இதைக் கணிசித்தே ஶ்ருதி **'मातृदेवो भव' 'पितृदेवो भव'** என்று பிதாவுக்கு முன் மாதாவைக் கூறிற்று. பற்பல விடங்களில் பிதாவுக்கு ப்ரஸித்தமாகக் கௌரவம் கூறப்பட்டிருந்தாலும், பிதா புத்ரோத்பாதகனை யொழிய, புத்ரனுடைய போஷணாதிகார்யங்களில் அவன் விசேஷ கவனமுள்ளவனாக இருப்பதில்லை. மாதாவோவெனில், புத்ரனை பத்து மாதம் கர்ப்பத்தில் தாங்கி, ஸஹிக்க முடியாத ப்ரஸவ வேதனையைப் பொறுத்துப் பெற்று நாளொரு வண்ணம் பொழுதொருமேனியுமாகக் குழந்தையை வளர்ப்பதில் மிக்க கவலை கொண்டு, குழந்தையின் பசிப் பிணிகளைத் தானாகவே யறிந்து முறையே அதற்குத் தக்கபடி உணவூட்டியும், மருந்தைப் பலாத்காரத்தால் உட்கொள்ளும்படி செய்வித்தும், பசியைப் போக்கியும், ஆரோக்யத்தைத் தேடியும், குழந்தையின் ஸுகமே தன் ஸுகமென்றும், அதன் துக்கமே தன் துக்கமென்றும் பாராட்டி, குழந்தையின் அசுத்தியைக் கவனியாமல், பால்ய தசையில் நன்கு போஷித்து, யௌவனப் பர்வத்திலும் அவனுடைய பருஷ பாஷணங்களைப் பொறுத்தும், அவனை விட்டகல இசையாமல் அந்தப் புதல்வனுடைய ப்ரீதியையே வேண்டியிருப்பாள். இக்காரணத்தால் பிதாவைவிட மாதாவே புத்ரனால் கௌரவிக்கத் தக்கவள். இதை யொட்டியே **'पितुश्शतगुणं माता गौरवेणातिरिच्यते'** [பிதாவைவிட மாதா கௌரவத்தினால் நூறு மடங்கு மேற்பட்டிருக்கிறாள்.] என்று அபியுக்தர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும்: புத்ரன் தவறி நடந்தால் பிதா அவனைக் கோபித்து சிக்ஷிப்பான். தாயோ மிகுந்த பொறுமையை மேற்கொண்டு, புத்ரன் கணக்கிறந்த குற்றங்கள் செய்த போதிலும், வாத்ஸல்யத்தால் அவைகளைப் பொறுத்து, அவன் மனம் நோகாமல் இன்சொற்களால் ஹிதோபதேசம் செய்வாள். அவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வாள். தன்னை அவன் அலக்ஷ்யம் செய்தாலும் கவனிக்கமாட்டாள். புதல்வனுடைய ஸுகமே தன் ஸுகமாகக் கருதுவாள்.

ஈஷணாத்ரயத்தையும் வர்ஜித்து இல்லறத்தை நீத்துத் துறவு பூண்டு ப்ரஹ்ம நிஷ்டர்களாயிருக்கிற ஸந்யாஸிகள்கூட, தாம் அருகிலிருக்கும் தருணத்தில் மாதாவின் நிர்யாணம் நேர்ந்தால், தண்ட கமண்டலங்களைத் தூர வைத்துவிட்டு மாதாவின் உத்தர க்ரியைகளைச் செய்து அக்நி ப்ரதானம் செய்தே தீரவேண்டுமென்று ஶாஸ்த்ரங்கள் சொல்வதாகப் பெரியோர் கூறுகின்றனர். மாத்ரு பக்தியாலும், பித்ரு பக்தியாலும் அடையப்படாதது ஒன்றுமில்லை. பகவத் ப்ரஸாதத்தைவிட மாத்ரு ப்ரஸாதம் ஶ்லாகிக்கத் தக்கது. ஐஹிகம் ஆமுஷ்மிகம் இரண்டும் இப்பக்தியால் ஸித்திக்கின்றன. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ' மாவர். தாயினிடம் பக்தியில்லாதவனுக்குத் தீர்த்தாடனங்கள், பகவத் வந்தனங்கள், தேவதாராதனங்கள், ஆசாரங்கள், அநுஷ்டானங்கள் இவைகள் அனைத்தும் பயன்படா. உண்மையான மாத்ரு பக்தியுள்ளவனுக்கு மேற்கூறப்பட்ட தீர்த்தாடனங்கள் முதலியன வேண்டாம். இவ்விஷயத்தில் தர்மவ்யாதரின் அநுஷ்டானம் ப்ரதானமான ப்ரமாணம். இத் தர்மவ்யாதரின் உபாக்யானத்தை மஹாபாரதம் வனபர்வத்தில்

பார்க்க காணலாம். அதனை இங்கு சுருங்கக் கூறுவோம்.

தர்மவ்யாதர் மிதிலா நகரியில் இருந்துகொண்டு தம் குலத் தொழிலைச் செய்து ஜீவித்து வந்தார். மானிறைச்சிகளையும் எருமைத் தசைகளையும் விற்று ஜீவிப்பது அவர் தொழில். கௌசிகன் என்ற ஒரு ப்ராஹ்மணன், பதிவ்ரதையான ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீயினால் ஏவப்பட்டவனாய்த் தர்மவ்யாதரிடம் ஸகல தர்மங்களையும் கேட்டறியவேணுமென்று அவாக்கொண்டு அவரை நாடினன். அவர், தம்மிடம் தர்மங்களைக் கேட்பதற்காகப் பதிவ்ரதையினால் தூண்டப்பட்டு ப்ராஹ்மணன் வந்திருக்கிறானென்பதை ஜ்ஞான த்ருஷ்டியால் அறிந்து, ஏகாந்தமாய்த் தூரத்தில் ஒதுங்கி நிற்கும் ப்ராஹ்மணனை அணுகி, 'ப்ராஹ்மணோத்தமரே! நும் வரவு நல்வரவாகுக. நான் ஜாதியில் வேடன். நீர் இந்த இடத்துக்கு வந்த காரியத்தை நீர் சொல்லாமலே அறிந்தேன். அந்தப் பதிவ்ரதை உம்மை அனுப்பினளோ?' என்றார். அதுகேட்டுக் கௌசிகன் ஆச்சர்யம் கொண்டு விஸ்மயத்துடன் 'வ்யாதரே! எனக்கு நீர் ஸூக்ஷ்ம தர்மங்களை உபதேசித்தல் வேண்டும்' என்று ப்ரார்த்தித்தான். அவர் அந்த ப்ராஹ்மணனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அர்க்யபாத்யஆசமநீயங்களால் பூஜித்தார். அந்தணன் அவைகளை மகிழ்வோடு ஏற்று அவரை நோக்கி, 'உம்முடைய ஜ்ஞானமெங்கே? இந்தக் கோரமான மாம்ஸ விக்ரயத் தொழிலெங்கே? இவை ஒன்றுக்கொன்று விருத்தமாகக் காணப்படுகின்றனவே! இந்தத் தொழில் செய்வது உமக்கு யுக்தமென்று தோன்றுகிறதா?' என்று கேட்டான். தர்மவ்யாதர், 'தகப்பன் பாட்டன் காலம் முதல் பரம்பரையாகச் செய்யப்பட்டு வருவதும் சிறப்புற்றதுமான இந்தத் தொழில் என் குலத்துக்குத் தக்கதே. ஸ்வதர்மத்தில் நிலைபெற்றிருக்கிற என்னைப்பற்றி நீர் வ்யஸநப்படவேண்டாம். பகவானால் ஏற்படுத்தப்பட்ட புராதநமான ஸ்வதர்மத்தை வழுவாமல் அநுஷ்டித்துக்கொண்டு, வயது முதிர்ந்தவர்களான தாய் தந்தையரை ஆராதிக்கிறேன். உண்மையையே பேசுகிறேன். அஸூயைப் படுகிறதில்லை. சக்திக்குத் தக்கபடி கொடுக்கிறேன். நான் ஒன்றையும் இகழ்கிறதில்லை. முற்பிறப்பிற் செய்த வினையானது செய்தவனைப் பின்றொடர்கிறது' என்று சொன்னார். பிறகு கௌசிகன் தர்மவ்யாதரை ஆசார்யனாக வரித்து, அவரிடத்தினின்று எல்லாத் தர்மங்களையும் மோக்ஷ தர்மத்துடன் ஸம்சயமற நன்கு கேட்டறிந்தான். மஹதாச்சர்யம் கொண்ட கௌசிகன் தர்மவ்யாதரை நோக்கி, 'இவ்விதமான ஜ்ஞானம், தூய்மை, பொறுமை, விநயம், ஆஸ்திக்ய புத்தி முதலிய குணங்கள் யாது காரணத்தால் உமக்கு உண்டாயின?' என்று வினவ, வ்யாதர் 'ஐயா! ஜ்ஞானம் முதலிய குணங்கள் எதனால் எனக்கு ஸித்தித்தனவோ அந்த வஸ்துவை நீர் என் க்ருஹத்தினுள்ளே புகுந்து நேரில் காண்பீராக' என்று சொல்லி ப்ராஹ்மணனை உள்ளே அழைத்துச் சென்றார்.

க்ருஹத்தினுள் சென்றவுடன் வெள்ளைவஸ்த்ரம் உடுத்தியவர்களும், நன்றாகப் பூஜிக்கப்பட்டவர்களும், போஜநம் செய்தவர்களும், ஸந்தோஷத்துடன் கூடினவர்களும், சிறந்த ஆஸநத்தில் வீற்றிருப்பவர்களுமான தர்மவ்யாதனுடைய தாய் தந்தையர்களைக் கௌசிகன் கண்டான். அவர்களைக் கண்டவுடன் தர்மவ்யாதர் அவர்களுடைய சரணங்களைத் தமது முடியினால் வணங்கினர்.

மாதாபிதாக்கள் தர்மவ்யாதரை நோக்கி, 'தர்மங்களை அறிந்தவனே! எழுந்திரு, எழுந்திரு. தர்மம் நேரிலிருந்து உன்னைப் பாதுகாக்கட்டும். உன்னுடைய சுத்தியினால் நாங்கள் ப்ரீதியடைந்தோம். நீ நீண்ட ஆயுளைப் பெறுவாயாக. ஸத்புத்ரனான உன்னால் தினந்தோறும் காலத்தில் நன்றாகப் பூஜிக்கப்பட்டு வருகிறோம். தேவலோகத்தில் வஸிப்பது போல் இங்கு ஸுகமாக வஸித்து வருகிறோம். தேவதைகளுக்குள் எங்கள் இருவரைத் தவிர்த்து உனக்கு வேறு தேவதையில்லை. உன் ஶுஶ்ரூஷையினால் நாங்கள் ப்ரீதியடைந்தோம். பரசுராமன் தம் வயது முதிர்ந்த தாய் தந்தயரை எவ்வாறு பூஜித்தாரோ அவ்வாறு நாங்கள் பூஜிக்கப்படுகிறோம். அதைவிட மேலாகவும் பூஜிக்கப்படுகிறோம்' என்று ஆசிர்வதித்துப் புகழ்ந்தார்கள். இவைகளைக் கண்ணுற்ற கௌசிகன் பெருமகிழ்ச்சிகொண்டு மாத்ரு பித்ரு பக்தியின் பெருமையை யறிந்து தர்மவ்யாதரை நோக்கி, 'மஹாநுபாவரே! உம்முடைய பக்தியே பக்தி. எல்லா ஶ்ரேயஸ்ஸுக்களையும் நீர் இவர்கள் அநுக்ரஹத்தாலன்றோ அடைந்து விளங்குகிறீர்! நீர் மாதா பிதா ஆகிய இருவரையும் எவ்விதமான எண்ணத்துடன் எவ்வாறு பூஜிக்கிறீர்?' என்று

வினவ, தர்மவ்யாதர் மாதாபிதா இருவர் விஷயத்தில் தம்முடைய அபிஸந்தியையும் தாம் செய்யும் பணிவிடைகளையும் சுருக்கமாகச் சொல்லலானார்.

‘ஹே பகவந்! இந்தத் தாய் தந்தையர்களே எனக்குப் பரதேவதை. தேவதைகளுக்குச் செய்யவேண்டியதை நான் இவர்களுக்குச்செய்கிறேன். இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள் எல்லா உலகினராலும் எவ்வாறு பூஜிக்கப்படுகிறார்களோ, அவ்வாறே வயது முதிர்ந்த இத்தாய் தந்தையர்கள் என்னால் பூஜிக்கப்படுகிறார்கள். ப்ராஹ்மணர்கள் உபஹாரத்தைக்கொண்டு தேவர்களையடைந்து ஆராதிக்கிற மாதிரி நான் என் மாதா பிதாக்களைச் சோம்பலில்லாதபடி ஆராதிக்கிறேன். பிதா, மாதா, அக்நி, ஆத்மா, குரு இவ்வைவரும் ச்ரேயஸ்ஸை அடைவதில் நோக்கமுள்ள புருஷனுக்குக் குருக்கள்’ என்று தாய் தந்தையரின் மஹிமையையும் அவர்களிடம் தாம் வழிபடுகிற விதத்தையும் கூறினார்.

இவை யாவற்றையும் கேட்டறிந்த ப்ராஹ்மணோத்தமன் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து மாத்ருபித்ருபக்தியையும் மற்றும் பல விசேஷ தர்மங்களையும் தெரிந்துகொண்டு தம்மூர் சென்றார்.

இங்க மாத்ரு பித்ரு பக்தியினால் உண்டாகும் விசேஷங்கள் ஸத்யவானிடத்தில் மிகுந்து காணப்படுகின்றன. இவனுடைய சரித்ரமும் ஆராயத்தக்கது. ஸால்வ தேசாதிபதியான த்யுமத்ஸேநனுடைய புதல்வன் ஸத்யவான். அவன் தேஜஸ்வியாகவும் மஹாபுத்திமானாகவும் வீரம் பொறுமை முதலிய குணங்களுள்ளவனாகவும், பெற்றோர்களால் அன்பு செய்யப்பட்டவனாகவும், கொடையாளியாகவும், கட்டழகு வாய்ந்தவனாகவும் இருந்தான். இந்த ஸத்யவானை மத்ரதேசாதிபதியான அஸ்வபதியின் குமாரியான ஸாவித்ரீ தானாகவே வந்து கணவனாக வரித்தாள். ஸத்யவான் அந்த ஸாவித்ரியை விதிப்படிமணந்துகொண்டு அந்தகனும் வயது முதிர்ந்தவனும் தரித்ரனுமான தன் தந்தையையும் தாயையும் பரதேவதா பாவனையோடு பூஜித்துவந்தான். ஆனாலவன் அல்பாயுஸ் உள்ளவனாக இருந்தான். அஸாதாரணமான மாத்ரு பித்ரு பக்தியினாலும் ஸாவித்ரியின் பாதிவ்ரத்ய மஹிமையினாலும் அவன் தன் அல்பாயுஸ்ஸை அகற்றித் தீர்க்காயுஸ்ஸையும், நஷ்டமான ராஜ்யத்தையும், நஷ்டமான பித்ரு த்ருஷ்டியையும்; அபரிமிதமான ஐஸ்வர்யத்தையும், கீர்த்தியையும், தர்ம சிந்தனையையும் பெற்று வாழ்ந்திருந்தான். அவன் காட்டில் போய் விறகு வெட்டிக்கொண்டுவருவதாக உத்தேசித்து மாதாபிதாக்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்படும் தருணத்தில் நாரதரால் அன்று ஸம்பவிக்கப்போகும் அவனுடைய மரணத்தை அறிந்தவளான ஸாவித்ரியும் அவனுடன் கூடவே கானகம் சென்றாள். ஸத்யவான் காட்டில் விறகு வெட்டிக் களைத்து மயக்கமுற்று ஸாவித்ரியின்மடியில் படுத்தான். யமதர்மராஜன் தானே நேரில் வந்து ஸத்யவானுடைய உயிரைப் பாசத்தால் கட்டியிழுத்துச் செல்லவே, ஸாவித்ரி தன் பாதிவ்ரத்ய மஹிமையினால் தர்மராஜனைக் கண்டு பலவிதமாகத் துதித்து அவனிடமிருந்து அநேக வரங்களைப் பெற்று, கடைசியாக ஸௌமங்கல்ய பிக்ஷை எடுத்து ஸத்யவானுடைய உயிரை மீண்டும் வரவழைத்தாள். ஸத்யவான் உயிர் வந்தவுடன் தூங்கியெழுந்திருந்தவன்போல் ஸாவித்ரிமடியிலிருந்து எழுந்திருந்து ‘ஸாவித்ரீ! நான் நெடுநேரமாகத் தூங்கிவிட்டேன். நடுநிசி வேளை இது. ஆயினும் இப்பொழுதே நாம் இருவரும் நம் மாதாபிதாக்கள் இருக்கும் ஆஸ்ரமம் போய்ச் சேரவேண்டும். என் தலைவலி நீங்கிவிட்டது. என் உடலில் நோயொன்றும் காணப்படவில்லை. இப்பொழுதே நான் என் பெற்றோர்களிடம் போய்ச் சேர்ந்தாக வேண்டும். அஸமயத்தில் நான் ஒருபோதும் இதற்குமுன் ஆஸ்ரமத்தை விட்டு அகன்றவனல்ல. ஸந்த்யாகாலம் வராமலிருக்கும் தருணத்தில் நான் ஆஸ்ரமத்தை விட்டு வெளிப்புறப்பட்டால் என் தாய் என்னைத் தடுப்பாள். பகலில்கூட நான் வெளிப்பட்டுப்போனால் என் மாதாபிதாக்கள் ஸந்தாபத்தை அடைவார்கள். நான் ஆஸ்ரமம் வரும் ஸமயம் கொஞ்சம் தவறினால் பிதா அச்சமயத்தில் அங்குள்ள பலரோடும் சேர்ந்து என்னைத்தேடுவார். கல்யாணீ! என்னைப்பற்றி நான் வருத்தமடையவில்லை. பிதாவைப்பற்றியும் பர்த்தாவை அனுஸரித்திருப்பவளும், மிக்க துயரத்தில் ஆழ்ந்திருப்பவளுமான என் மாதாவைப்பற்றியும் வ்யஸநிக்கிறேன். என் நிமித்தமாக அவர்கள் இப்பொழுது அதிக ஸந்தாபத்தை யடைவார்கள். என்னால் காப்பாற்றத் தக்கவர்களான அவ்விருவர்களும் ஜீவித்திருக்கவேண்டுமேயென்று கவல்கிறேன். அவர்களுக்கு ப்ரி

யத்தைச் செய்யவேண்டுமென்றே நான் ஜீவித்திருக்கிறேன். எனக்கு மாதா பிதாக்களே தைவங்கள்' என்று சொல்லிவிட்டு ஸத்யவான் தன் இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு உரத்த சப்தத்துடன் ரோதநம் செய்தான். பின்னர் இருவரும் அப்பொழுதே வீடு திரும்பினர். இவ்விதமான மாத்ருபித்ருபக்தியைச் செய்த ஸத்யவான் நீண்ட ஆயுளையும் நஷ்ட ராஜ்யத்தையும் குபேரைஸ்வர்யத்தையும் பெற்று, மாத்ருபித்ருப்ரஸாதத்தால் அக்ஷயமான பாரலௌகிக ஸுகத்தையும் பெற்றான்.

தவிர: பிறப்பிறப்பில்லாத பரம புருஷன் **'अजायमानो बहुधा विजायते'** என்கிற ஶ்ருதி வசநத்தின்படி, **'परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां। धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे॥'** என்கிற தன் ஸங்கல்பத்தால் ஸாதுக்களைப் பாது காப்பதற்கும் துஷ்டர்களை நிக்ரஹிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் பூமியில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்து எல்லாத் தர்மங்களையும் அனுஷ்டித்துக் காட்ட வந்தவராதலால் மாத்ரு பித்ரு பக்தியை நன்றாகத் தான் அனுஷ்டித்துக் காட்டியதோடு, அதனால் ஏற்படும் நற்பயன்களை ஸ்வானுஷ்டானத்தால் உலகத்தாருக்குக் காட்டியிருக்கிறார்.

'विलपन्तीं तथा दीनां कौसल्यां जननीं ततः।
उवाच रामो धर्मात्मा वचनं धर्मसंहितम्॥

नास्ति शक्तिः पितुर्वाक्यं समतिक्रमितुं मम।
प्रसादये त्वां शिरसा गन्तुमिच्छाम्यहं वनम्॥'

இவ்வாறு தைந்யத்துடன் புலம்புகிற தாயாரான கௌஸல்யையைப் பார்த்து தர்மத்தில் நிலைபெற்ற மனதுடன் கூடின ஸ்ரீராமன், 'தாயே! பிதாவினுடைய வாக்யத்தை நான் மீறுவதற்கு எனக்கு ஶக்தியில்லை. அம்மா! உன்னைத் தலையால் வணங்கி அநுக்ரஹத்தைச் செய்ய ப்ரார்த்திக்கிறேன். கானகம் செல்ல விரும்புகிறேன்' என்று தர்மத்தோடு கூடிய வசநத்தை உரைக்கின்றார். இவ் வாக்யங்களால் ஸ்ரீராமபிரானுக்கு மாதாபிதாக்களிடம் உள்ள பக்தியானது கரை கடந்ததாக இருக்கிறதென்பது வெளிப்படை. இப்படியே அர்ஜுநன் தன் மாத்ரு வாக்யத்தால் தன்னால் ஜயித்துக் கொண்டுவரப்பட்ட பாஞ்சாலியை எல்லா ப்ராதாக்களோடும் மணந்தான். பரசுராமனுடைய பித்ரு பக்தி எல்லையற்றதென்பதை யாவருமறிவர். கண்டு (**कण्डु**) என்னும் மஹர்ஷியானவர் பித்ரு பக்தியினால் அவர் சொற்படி பசுவைக் கொலைசெய்தார்.

இப்படி மாத்ரு பக்தியாலும் பித்ரு பக்தியாலும் தகாத கார்யங்களைச்செய்தும், ஐஹிக ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸை அடைந்தவர்கள் எண்ணில் அடங்கார். இதிஹாஸங்களும் புராணங்களும் இதை விஸ்தாரமாய்க் கூறுகின்றன.

श्रीः

அட்டைப்பட விளக்கம்

प्रशमितकलिदोषां प्राज्यभोगानुबन्धां समुचितगुणजातां सम्यगाचारयुक्ताम्।
श्रितजनबहुमान्यां श्रेयसीं वेङ्कटाद्रौ श्रियमुपचिनु नित्यं श्रीनिवास! त्वमेव॥

திண்ணமிது வீடென்னத் திகழுவதாயும், கடுவினையார் இருவினையும் போக்கடிக்கக்கூடியதாயும் உள்ள திருவேங்கடமென்னும் மாமலையில் தெளிந்த பெருந்தீர்த்தங்களைச் சொறியும் சுனைகள் பல உள. அச்சுனைகளில் ஏதேனுமொன்றில் 'மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே' என்றும், கோயிலின் 'படியாய்க்கிடந்துன்பவளவாய் காண்பேனே' என்றும் ஆழ்ந்த பக்தியுடைய ஆழ்வார் ஆசைப்பட்டார். அப்படியே விண்ணவரும் மண்ணவரும் விரும்புகின்றனர். இவ்விதம் எல்லோரும் விரும்பும் கலியுகதைவமான திருவேங்கடநாதன் தன்னுடைய அடியிணைகளை நமக்குக் காட்டிக்கொண்டு "வஜ்ராங்கி" யுடன் ஸேவை ஸாதிக்கிறான். இப்புனிதப் புரட்டாசியில் நம் தேசத்தில் அவனை நினையாதாருண்டோ!

- न. कृ. -

ஸ்ரீ:

"ஓரொன்றுதானே"

'ஸ்ரீயா தநோதி கவயா ஸ்வஸ்திந்து
ச்யாமா த்விஷிதயா ஸ்வயம் ।
ஸகோ விச்வ சித்ரம் விதநு
விஹாஸ்ரீ ரோ ரஜீஜநத் ॥'

ஸ்ரீயாதவாப்யுதய மஹாகாவ்யத்தின் முதல் ஸர்க்கத்தில் ஒன்பதாவது ச்லோகமிது. இந்தக் காவ்யத்தின் அருமைபெருமைகளைக்கண்டு ஆச்சர்யப்பட்டு இதற்கு ஒரு வ்யாக்யானம் செய்த அப்பையதீக்ஷிதர் என்னும் ப்ரபல அத்வைத ஆசார்யர் இந்த ச்லோகம் வந்தவாறே காவ்யத்தினுடையவும், இலக்கியத்தினுடையவும் இன்பத்தின் இறுதியை எட்டிப்பார்த்ததாலேற்பட்ட ஆஹ்லாதத்தால் ஒரு ச்லோகம் பாடியிருக்கிறார்.

'ஜயம் விவிக்த்ரஸஸ்வத்ர
ஹாவாஸ்தி வதே வதே ।
கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய
காவ்யேஷ் வஸிதேஷ்வபி ॥'

இதைப் பார்த்த பிறகு ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தைச் சேர்ந்த ஒரு ஆசார்யச்ரேஷ்டர்

'ஓரொன்று தாப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில்வாழ்வாருக்கு
வானேறப்போமளவும் வாழ்வு'

என்று தனியன் ஸாதித்து ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனைப்பாராட்டியிருப்பதில் என்ன வியப்பு என்று தோன்றும். ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும் ஒன்றாக இருந்து சில அர்த்த விசேஷங்களை மட்டும் வேறாக யோஜித்த உபகாரியரோடு, ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும் முற்றிலும் வேறுபட்டு அங்யஸித்தாந்தி அபஸித்தாந்தி என்ற கணக்கில் தேசிகனாலேயே கருதப்பட்ட தீக்ஷிதரோடு வாசியற எல்லாருடைய உள்ளங்களையும் கொள்ளை கொள்ளவல்ல அழகிய ஸ்ரீஸூக்திகள் தேசிகனுடையவை என்பது விளங்குகிறது. இவ்விருவருடைய பாராட்டுக்களுக்குள் தீக்ஷிதர் பாராட்டிலும் பிள்ளைலோகாசாரியருடைய பாராட்டு ஒரு படி ரஸவத்தாகக்காணப்படுகிறது. தாத்பர்யம் கிட்டத்தட்ட ஒன்றாக இருந்தாலும் 'ஹாவாஸ்தி வதே வதே' என்பதிலும் 'ஓரொன்றுதானே யமையாதோ' என்பது வெகு அழகு. எதை எடுத்துக்கொண்டாலும், ஒரு காவ்யமோ, ஸ்தோத்ரமோ, சாஸ்த்ரவிசாரமோ, ரஹஸ்யமோ, அதில் ஒரு பங்க்தியோ, ஒரு ச்லோகமோ, பாசுரமோ, அவற்றில் ஒரு பாதமோ, ஒரு பதமோ,— ஒவ்வொன்றுமே அமையும். ஓரொன்றுதானே ஒவ்வொன்றுமே என்று பொருள். அதோடு நில்லாமல் ஓரொன்று,— தானே யமையாதோ என்றும் ஒரு பொருள் த்வனிக்கிறது. தேசிகன் அருளிச்செயல்கள் ஒவ்வொன்றும் பிறிதொரு பொருளையும் அபேக்ஷிக்காது வானேறப்போமளவும் வாழ்வுக்குத்தானொன்றுமே யமையும் என்று சொல்லப்பட்டதாகிறது. அநுபவித்தபேர்களே இப்படிப் பேசவல்லவர்கள்.

அப்பையதீக்ஷிதரென்றால் ஒரு பெரிய மேதாவி. அத்வைதாசார்யர்களுக்குள் முன்னணியில் இடம் பெற்றவர். ஆலங்காரிகர்களில் முதல் இடமே பெற்றவரென்று சொல்ல வேண்டும். அவரை இப்படிப் பேசவைத்த இந்த ச்லோகத்தின் அழகைக் கவனிப்போம்.

ஸ்ரீமானும் விபுவாயுமுள்ள ஸர்வேச்வரன் ஒருவனாக விருந்துகொண்டு லீலையாகிற கூர்ச்சத்தை சித்ரம் எழுதும் கருவியைக் (Brush) கொண்டு தயையாகிற மஷியை (Ink) உபயோகப்படுத்தித் தன்னிடத்தில் தானாகவே இந்த ப்ரபஞ்சமாகிற சித்ரத்தை உண்டாக்குகிறான் என்று பொருளாகிறது இந்த ச்லோகத்துக்கு.

ஸ்ரிய:பதியான நாராயணன்தான் ஜகத்காரணமென்று உபநிடதங்களிலும், ஸூத்ர வாக்யங்களிலும், ஸூத்ர பாஷ்யாதிகளிலும் எத்

தனையோ இடங்களில் எத்தனையோ விதங்களாக பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு ச்லோகத்தில், ஒரு அநுஷ்டுப் ச்லோகத்தில், அதனுடைய ஏகதேசத்தில் எம்பெருமானுடைய ஸர்வதோமுகமான காரணத்வம் இங்குப் ப்ரதிபாதிக்கப்பட்டதுபோல் எங்கும் காணமுடியாது. ஸ்வயம் என்றதால் நிமித்த காரணத்வம், ஸ்வஸ்மிந் என்றதால் உபாதாந காரணத்வம், ஏக: என்றதால் ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யம், க்ரீடாதூலிகயா க்ருபாருஷிதயா என்றதால் அவனுடைய க்ரீடையும் க்ருபையுமே ஸஹகாரிகாரணங்களாகையால் ஸஹகாரிகாரணத்வம், இப்படியாக எல்லா அம்சங்களும் சொல்லப்பட்டதாயிற்று. குடவனையும், மண்ணையும், தண்டம் சக்ரம் போன்றவைகளையும் கொண்டு நிமித்த, உபாதான, ஸஹகாரி காரணங்களைச்சிஷ்யனுக்கு ஆசார்யன் தெளிவு படுத்திவந்த விஷயத்தில் வெகு இன்பகரமான ஒரு சைத்ரிகன், வ்யாபாரத்தைக் காட்டித் தெளிவிக்கும் இந்த அழகுக்கு ஈடும் எடுப்பும் எங்கு க்காணவியலும்!

ஏக:, விபு:, ஸ்ரீமான் என்ற மூன்று சொற்களாலே இங்கே பெருமாள் பேசப்பட்டிருக்கிறார். நிமித்தகாரணத்வம் ஏக: என்ற சொல்லிலும், உபாதாநகாரணத்வம் விபு: என்ற சொல்லிலும்; லீலை தயை என்ற இரண்டு ஸஹகாரிகாரணங்களும் ஸ்ரீமான் என்ற சொல்லிலும், அடங்கி விளங்கும்படி. நாயகியுடன் கண்டு ரஸித்து இன்பம் நுகருவதற்காக ஏற்பட்டது சித்ரம். இது லீலாரஸத்தைக் காட்டுவது. அருளெனும் சீர் ஓர் அரிவையாதென விளங்குபவள் ஸ்ரீ (திரு)யாகையால் க்ருபையாகிற மற்றொரு ஸ்ருஷ்டி காரணம் வெளியாகிறது. இது ச்லோகமா? ஸூத்ரமா? ஸூத்ரமாயின் அதற்கு வ்ருத்தியும் பாஷ்யமும் அத்தேசிகனேதான் எழுதவேண்டும். எவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களுடன் இது பாடப்பெற்றதென்பதை பாடிய பெருமான்தான் முழுவதும் அறிய இயலும். பாடப்பட்ட பெருமாளுக்குக் கூடத் தெரியுமோ என்னமோ? ஸந்தேஹம் தான்.

ஒரு சித்ரம் வரைய வேண்டுமென்றால் (1) ஒரு திரை அல்லது பலகை, (2) வர்ணங்களாலாய மஷி, (3) அதில் தோய்த்துத் தீட்டுவதற்குண்டான கருவி (கூர்ச்சம் Brush) இவை அவச்யம். எழுதும்போது இவை மூன்றும் இன்றியமையாதவையெனினும் எழுதி முடிந்த பிறகு, காணப்படுவன தன்மேல் எழுதப்பெற்ற பலகையும் எழுத உபயோகித்த மஷியுமே. எழுதுகோலாயிருந்த அந்த தூலிகை சித்ரத்தில் பார்க்க வியலாது. சைத்ரிகனும் காணப்படான், அவன் சித்ரத்தோடேயே இருக்கவேண்டுமென்ற நியமமில்லாதபடியால். இந்த விச்வமாகிற சித்ரத்திற்கும் இவையனைத்தும் உண்மையே. இதிலிருந்து அத்புதமான ஒரு அர்த்த விசேஷம் வெளியாகிறது சற்று உற்று நோக்கின். லீலை, தயை இரண்டும் ஜகத்ஸ்ருஷ்டியில் உதவின வென்பது உண்மையேயாயினும் எப்படிபூசப்பட்ட மஷிமட்டும் தெரிந்து பூசுவதற்கு உபயோகப்பட்ட தூலிகை காணப்படுவதில்லையோ, அப்படியே தயை மட்டும் தான் காணப்படுகிறதேயன்றி, லீலையென்னும் அம்சம் ஊஹித்தறியவேண்டிய நிலையில் மட்டும் நின்று நமக்குத் தெரியாமலிருக்கிறது, ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகில் தயையே காணக் கிடைக்கிறது என்பதை இதைக்காட்டிலும் ஸ்பஷ்டமாகவோ அழகாகவோ சொல்லிக் காட்ட முடியுமோ? க்ருபாதூலிகயா க்ரீடாருஷிதயா என்று பாடியிருந்தாலும் ச்லோகநியமம் தவறாது. எம்பெருமானது க்ருபையே லீலையில் காட்டில் நம்மால் போற்றப் பெறவேண்டும் என்று போதித்தருளுகிறார் ஆசார்ய வள்ளல். இது ஒன்றே அமையாதோ!

ஸ்ரீ:

நீ ஸர்வஜ்ஞனாகவேண்டா

ஸமீபத்தில் ஒரு மஹானுடன் ஸம்பாஷித்துக் கொண்டிருந்தோம். பிறமத பண்டிதர்களுடன் மிக்க பழக்கங்கொண்ட வித்வான் அவர். ஸ்வாமி தேசிகனையும், அவர் ஸ்ரீஸூக்திகளையும் பற்றி எங்கள் பேச்சு திரும்பியது. அவர் தன்னிடம் ஒரு பிறமதபண்டிதர் தெரிவித்ததாக ஒரு தகவலைச் சொன்னார். விஷயம் ரொம்பவும் உண்மையானதாகவிருந்தது. பிறமதபண்டிதர் சொன்னாராம்:— 'வைஷ்ணவர்களாகிய நீங்கள், தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸாரத்தைப் பெரும்பாலும் தவறாமல் ஆசார்யனிடம் காலக்ஷேபம் செய்கிறீர்கள். ஆயினும் அக்ரந்தத்தின் உண்மையான உயர்வு உங்களில் பலபேருக்குத் தெரியாது என்றே நினைக்கிறேன். சுருக்கமாகச் சொன்னால் 'தன் காலத்தில் 'வைஷ்ணவஸம்ப்ரதாயம் வைதிகம் அல்ல' என்று பிறர் பலரும் ஏசத்தகுந்த நிலையில் நின்ற அந்த ஸம்ப்ரதாயத்தை, தேசிகன் அக்ரந்தத்தின் மூலம் வைதிகவழியை ஒட்டி ஸ்ரீபாஷ்யாதிகளுடன் இசைத்து நிலை நாட்டினார்' எனக்கூறுவதே பொருந்தும். இதற்கு உதாஹரணம் அக்ரந்தத்திலுள்ள 'ப்ரபாவரக்ஷை, ப்ரபாவவ்யவஸ்தை' என்பதுபோன்ற அதிகாரங்களை தான்' என்று. இது முற்றிலும் மறுக்கவொண்ணாத உண்மை என்பதை அறிவாளிகள் அறிவர்.

அத்தகைய பெருமை பொருந்திய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஓரிடத்தில் ஸ்வாமி தேசிகன் உலகத்தவர்க்கு கீழ் காணுமாறு உபதேசிக்கிறார். 'ஈச்வர தத்வத்தையும், ஈசிதவ்ய (அவனால் ஆளப்படுகிற) தத்வங்களையும், யதா ப்ரமாணம் தெளிய ப்ராப்தம். இவ்விடத்தில் ஸர்வஜ்ஞனாகவும் வேண்டா. ... ... கடலிலே படகோடுவார், வழி முதலாக வேண்டுவன தெளியுமாப்போல் இவ்வளவு (வேண்டிய அளவுமட்டில்) விவேகிக்கை அவச்யாபேக்ஷிதம்' என்று. இன்றைய உலகில் இவ்வித உபதேசத்திற்கு மிகவும் தேவை இருக்கிறது. சிறிய க்ராமப்பள்ளிப்பிள்ளைகள் முதல், பெரியோர்வரை அநேகர் அளவுக்குப் மீறி அனாவச்யகவிஷயங்களில் தலையிட்டுக்கொண்டு சர்ச்சைகள் செய்து மனத்தை அலட்டிக்கொள்வதைப் பார்க்கிறோம். அரசியல் கட்சிகளில் அறிவைச் செலுத்தி தமது பள்ளிவாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்ட பேர் எவ்வளவு? தம் குடும்பத்தைச் சரிவர நிர்வஹித்துவர சக்தியற்றவர்கள் அரசாங்கநிர்வாஹத்தைப்பற்றி பலவித வாதப்போர்களை நிகழ்த்தி வீணே காலங்கழிப்பதை நாம் எவ்வளவு இடங்களில் காண்கிறோம். பிறதேசத்துப் பத்திரிகைச்செய்திகளைப் படித்தும், அவைகளைப் பார்த்தும், அத்தேசத்து நடை உடை பாவனைகளைக் காமுற்று அதுவும் கைகூடாமல், நம்மதுவும் கைகழன்று உபயப்ரஷ்டர்களாயுழன்றுகொண்டிருப்போர்தானெத்துணை பேர்? நம் தேசத்துச் சிறிய பையல்கூட அமெரிக்காதேசத்து ஜனாதிபதிபோன்றவரைப் பற்றி ப்ரஸங்கம் செய்யப்பயின்றிருக்கிறான். ஒருநாள் காலையில் செய்தித்தாள் கிடைக்காவிடில் வீட்டுக்காரருக்கு வேலையில் மனஞ்செல்வதில்லை. இவ்விதம் உலகமெங்கும் வீண்விஷயங்களில் அறிவுப்பசி மிகுந்து இருக்கிறது. இவ்விதநிலை தவறு என்றுதான் பெரியோர் பணிப்பர். எவ்விஷயத்தையும் பற்றி மிகுந்த அறிவைப் பெறுவதோ, அடியோடு அதைப் பெறாமலிருப்பதோ பிசகு. கடலில் படகோட்டுவார் தாங்கள் அவசியம் அறியவேண்டிய வழி முதலிய சிலதுகளையே வேண்டிய அளவு அறிகிறார்கள். ஸர்வஜ்ஞனான ஈசுவரன் ஜீவனை ஸம்ஸாரத்தில் அல்பஜ்ஞனாகவே படைத்துள்ளான். அப்பொழுதுதான் அவனால் அமைதியுடன் காலங்கழிக்க முடியும். அவ்வியற்கையை மீறி இப்பொழுது நாம் ஸர்வஜ்ஞர்களாகப்பார்க்கிறோம், முயலுகிறோம். இது வீண் தொந்தரவை விலை கொடுத்து வாங்குவதற்கொப்பாகும். வருங்காலம் பற்றிய அறிவு மனிதனுக்கு இருக்குமாகில் அவன் பலவிதங்களில் லாபம் அடையக்கூடும் என்று சிலர் கூறலாம். ஆனால் அதுபோல்

தனக்கு நேரப்போகும் பலவித ஆபத்துக்களையும் முன்கூட்டியே அறிந்த அவன் எங்ஙனம் மனநிம்மதியுடன் வாழமுடியும்? லாபம் இல்லாவிடினும் மனவமைதியாவது நமக்கு வருங் காலம்பற்றிய அறிவில்லாமையாலே மிச்சமாகிறதல்லவா? மறைவில் இருப்பவர் நம்மைப் பற்றிப் பேசுவதையும் நடந்துகொள்வதையும் அறிய ஈச்வரன்போல் நாம் சக்தி பெற்றிருந்தோமாகில், நமக்குத் துளியாகிலும் ஸுகம் கிடைக்குமா? நல்லோர்களையும் நிந்தனை செய்பவர்கள் நிறைந்திருக்கின்றனர். காணுதவிடங்களில் கெடுதல்களைச் செய்பவர்களுக்கும் குறைவில்லை. இவைகளையெல்லாம் நாம் அறிந்திருந்தோமாகில் அல்பஸுகமாவது நமக்குக் கிடைக்க வழி உண்டா? ஆகையால் அவசியமற்றவைகளில் அறிவை அலையவிடாமல் இருப்பதே அறிவுடைமை.

ஸ்ரீமத்ராமாயணத்தில் அயோத்யாகாண்டத்தில் ஸுமந்த்ரர் வாயிலாகக் கண்ட ஒரு கதை மேற்கூறின படிப்பினையை நமக்கு நன்கு அறிவுறுத்துகிறது. கைகேயி ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகனை சதிசெய்து கானகத்துக்கு அனுப்புகிருள். அப்பொழுது ஸ்ரீராமபக்த சிரோமணியான ஸுமந்த்ரருக்கு அவளிடம் அளவுமீறின கோபம் உண்டாகிறது. அவருடைய கோபநிலையை வால்மீகி வர்ணிக்கும் விதந்தான் என்னே! ஆஹா! அந்த ச்லோகங்களை வாயினல் படித்தாலே பரமரஸம் உண்டாகிறது:- '𑌤𑌤𑍋 𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌯 𑌸𑌹𑌸𑌾
𑌶𑌿𑌰𑍋 𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌸𑌕𑍃𑌤𑍍 । 𑌪𑌾𑌣𑍌 𑌪𑌾-
𑌣𑌿𑌂 𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌿𑌷𑍍𑌯 𑌦𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 𑌕𑌟𑌕𑌟𑌾𑌪𑍍𑌯 𑌚 ॥
𑌲𑍋𑌚𑌨𑍇 𑌕𑍋𑌪𑌸𑌂𑌰𑌕𑍍𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑍂-
𑌰𑍍𑌵𑍋𑌚𑌿𑌤𑌂 𑌜𑌹𑌤𑍍 । 𑌕𑍋𑌪𑌾𑌭𑌿𑌭𑍂𑌤𑌸𑍍 𑌸𑌹𑌸𑌾
𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌮𑌶𑍁𑌭𑌂 𑌗𑌤𑌃 ॥ 𑌕𑌮𑍍𑌪𑌯𑌨𑍍𑌨𑌿𑌵
𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌾𑌕𑍍𑌶𑌰𑍈𑌶𑍍𑌶𑌿𑌤𑍈𑌃'
தலைசாய்த்து, நெடுமூச்செறிந்து, கையில் கைவைத்துப்பிசைந்துகொண்டு ஸுமந்த்ரர் வெகு கோபத்துடன் நமது கண்முன்பே காட்சியளித்தே விடுகிருர். '𑌦𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 𑌕𑌟𑌕𑌟𑌾𑌪𑍍𑌯 𑌚' என்னும்போது அவர் பற்களை நறநறவென்று கடிக்கும் சப்தம் நமது காதிலும் விழுவதுபோலிருக்கிறது. '𑌲𑍋𑌚𑌨𑍇 𑌕𑍋𑌪𑌸𑌂𑌰𑌕𑍍𑌤𑍇'–கண்களைக் கோவைச்சிவப்பாகச் செய்துகொண்டுவிட்டார். இங்கு 'செய்துகொண்டு' என்னும் பொருளில் மூலத்தில் '𑌕𑍃𑌤𑍍𑌵𑌾' என்னும் பதம் இருக்கவேண்டும். கவிக்கு உள்ள வர்ணனைவேட்கையில் அப்பதம் மூலத்தில் சொல்லப்படாமலே போய்விடுகிறது. முகமெல்லாம் பழைய வர்ணம்மாறி சிவந்துவிடுகிறது. மிகவும் கொதிப்படைந்தார். கூரிய அம்பைபொத்த கூற்றுக்களினுல் அவளைத் துளைத்துவிடுவார்போல் பேசினுர்:–

'கேகயராஜன் அரண்மனையில் அக்காலத்தில் நடந்த ஒரு ஸம்பவத்தைச் சொல்லுகிறேன்' என்று ஆரம்பித்தார்:- கைகேயியினுடைய பிடிவாதகுணம் அவள் தாயிடமிருந்து ரத்தத்தில் ஊறி வந்தது என்று அவருக்கு இங்கு நிரூபிக்கவேண்டும். அசுவபதி என்னும் கைகேயிபிதா ஒரு ஸாதுவிடம் யாசித்து ஒரு வரத்தைப் பெற்றுர். அதன்படி எல்லாப்பிராணிகளுடைய பேச்சுக்களும் இவருக்குப்புரிந்து பொருள் விளங்கும். ஆயினும் 'அதன் விவரத்தை யாருக்கும் இவர் சொல்லக்கூடாது. சொன்னுல் தலைவெடித்துவிடும்' என்று ஸாதுவின் நிபந்தனை. 'எல்லா ப்ராணிகளுடைய பேச்சுக்களும், அபிப்ராயங்களும் தனக்குத் தெரிந்தால் தன்னைவிட பாக்யசாலி யாருமிருக்கமாட்டார்கள்' என்று இவர் நினைத்து அம்மாதிரி வரம் பெற்றுர்போலும்! ஆனுல் அநாவச்யகவிஷயங்களில் அறிவு அதிகரிக்க அதிகரிக்க ஆபத்தும் அதிகமாக வரும் என்பதை இவர் அப்பொழுது உணர்ந்திருக்கவில்லை. சீக்கிரமே அம்மாதிரி உணர ஸந்தர்ப்பம் ஒன்று இவருக்கு நேரிட்டது. படுக்கையறையில் பத்னியுடன் ஒரு நாள் சயனித்திருந்தபொழுது கட்டிலின்கீழ் ஊர்ந்துசென்ற எறும்புகள் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டதை இவர் வரத்தின் பெருமையால் உணர்ந்து உணர்ச்சிமேலீட்டால் உரக்கச் சிரித்துவிட்டார். மிகவும் முன்கோபமுள்ள கைகேயீமாதாவுக்கு இவர் இம்மாதிரி சிரித்தது மிகுந்த சினத்தை உண்டுபண்ணிவிட்டது. தன்னைத்தான் இவர் இம்மாதிரி பரிஹாஸப்செய்தார் என்று அவள்

எண்ணினாள். காரணத்தைக் கூறுமாறு பலபடியாகப் பலவந்தம் செய்தாள் பர்த்தாவை. தர்மஸங்கட நிலையில் சிக்குண்ட இவர் மனைவிக்கு ஸாதுவின் நிபந்தனையை எடுத்துரைத்தார். சொன்னால் தனக்கு மரணமுண்டாம் என்று எச்சரித்தார். சுயநலமே உருக்கொண்ட அவளோ 'பர்த்தா போனாலும் பாதகமில்லை. சிரித்ததின் காரணம் சீக்ரமே தெரிய வேண்டும்' என்று ஒரே பிடிவாதம் செய்ய, இவர் உடனே சென்று அச்சாதுவினிடம் நடந்ததைப் பகர்ந்து யோசனை கேட்க, அந்த ஸாதுவும் 'ரஹஸ்யத்தை ரக்ஷிப்பாயாக; துர்மானங்கொண்ட அவளைத் தூர விலக்கிவை' என்று உபதேசிக்க ராஜாவும் அவளை விலக்கி வைத்து தனித்து வாழ்ந்து வந்தார்.

இக்கதையை ஸுமந்த்ரர் ஸபை நடுவில் எடுத்துச்சொல்லி 'அத்தகைய தாயின் வயிற்றில் தோன்றினவளன்றோ? நீ அவளைப்போல்பிடிவாதகுணமும், பர்த்தாவைப்பீடிக்கும்ஸ்வபாவமுமுன்னிடம் இல்லாமற்போகுமோ?' என்று கேட்டார். இதனால் கேகய அரசனைப்போல் வேண்டாததை விரிவாகக்கற்றால் விபரீதமே விளையும் என்று விளக்கப்பட்டதாகிறது. இப்பூவுலகச் செய்திகளே நம்மைப் பைத்யமாகச் செய்து கொண்டிருக்கும்பொழுது சந்த்ரன் செவ்வாய் முதலியமண்டலங்களின்செய்திகளை அறிய இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் முயற்சி எவ்வித விபரீதத்தை விளைவிக்குமோ. ஆதலால் உலகவிஷயங்களை அடியோடு அறியாமலிருப்பதும் தவறே. பார்ப்போர் பரிஹஸிக்கும்படியிருக்கும். ஒன்றுமறியாதவனை ஒப்பிடும்பொழுது ருச்யச்ருங்கரைத்தான் நாம் நினைக்கிறோம். 'நெல் மரத்தில் காய்க்கிறது' என்று நினைத்தவனைப்போல் தனக்கு நகரத்துப்பெண்கள் கொணர்ந்துகொடுத்த கொழுக்கட்டைகளை 'ஹோநீதி ஸூநூதெ' என்று மரத்தில் பழுத்த பழங்களாக கொழுக்கட்டைகளை அவர் நினைத்தாராம். அவர்போல் உலகவிஷயங்களை ஏதுமறியாமலிருக்கவும் வேண்டாம். இதனால்தான் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் 'ஈசேசிதவ்யவிஷயங்களில் (சேதநாசேதந ஈச்வரவிஷயங்களில்) நீ ஸர்வஜ்ஞனாகவும் வேண்டா; (யாதுமறியாப் பேதையாகவுமிருக்க வேண்டா) கடலில் படகோட்டுவார் வழி முதலான வேண்டிய விஷயங்களை மட்டும் அறிந்திருப்பதுபோல் நீயும் வேண்டியதை மட்டில் விவேகித்திருப்பது உசிதம்' என்று ஸாதித்தருளினார்.

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமத் தொடர்ச்சி

பரவை 13—9'—54

ஊர்வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி நடந்துவந்த ஆஹ்நிககாலக்ஷேபம் ஆவணிமீ 24வ சாற்றுமுறை ஆயிற்று. அத்துடன் நடந்து வந்த ஸம்ப்ரதாயபரிசுத்தி என்னும் சில்லரை ரஹஸ்யகாலக்ஷேபமும் 25வ முடிந்து சாற்றுமுறையாயிற்று. 26வ (11-9-54) அவ்வூரில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர் தன்னுடைய க்ருஹத்திற்கு மத்யாஹ்நம் பெருமாளை எழுந்தருளப்பண்ணி அன்று ராத்ரி ஆராதனத்தையும், மறுநாள் 12-9-54ல் பெரியதிருமஞ்ஜனத்தையும், விசேஷ ததீயாராதனத்தையும் நடத்தி வைத்தார். உத்தானத்தை யுத்தேசித்து கோயம்புத்தூர், சென்னை முதலிய இடங்களிலிருந்து வந்திருந்தவர்களும், ஊர்வாஸிகளும் அன்று காலை பெரியதிருமஞ்ஜன மானதும், முன்பு ஸங்கல்பத்திற்கெழுந்தருளியதுபோல் ஸ்ரீ அழகியசிங்கர் திருமுடி விலக்க மானதும் வைகையாற்றில் நீராட்டம் கண்டருளி திரும்பி வீதிவழியாகஊர்வலமாகஎழுந்தருளும்போது ஸேவித்து தன்யரானார்கள். ஆங்காங்கு மங்களஹாரத்தி எடுக்கப்பட்டது. பிறகு சாதுர்மாஸ்யவ்ரதோத்ஸர்ஜநமும் நடந்தது. இம்மஹோத்ஸவத்தையுத்தேசித்து கொண்டுவரப்பட்ட திருவள்ளூர், புள்ளபூதங்குடி முதலிய திவ்யதேசத்தெம்பெருமான்களின் மாலை, பரியட்டம் முதலியவைகளை ஸ்ரீ அழகியசிங்கர் தந்யோஸ்மி என்று ஸ்வீகரித்தாயிற்று. அன்று ராத்ரி உத்தானமஹோத்ஸவம் க்ரமப்படிநடந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வைகைக்கு அக்கரையிலுள்ள பரவை என்னும் க்ராமத்தில் உள்ள (துவரிமானில்) மதுரை அட்வொகேட் ஸ்ரீராமஸ்வாமி அய்யங்கார், அவர் தம்பி ஸ்ரீ கோவிந் அய்யங்கார் இவர்களுடைய தோப்பிற்கு எழுந்தருளியாயிற்று. இவர்கள் அவ்விடத்தில் பெருமாளும் ஸ்ரீ அழகியசிங்கரும் ஸௌகர்யமாக எழுந்தருளியிருப்பதற்கு கொட்டகைப் போட்டு மிகவும் ச்ரத்தையுடன் ஆராதித்தார்கள். சித்திராபௌர்ணமிமாதிரியும்வநமஹோத்ஸவம்மாதிரியும் இங்கு பெருமாள் எழுந்தருளியிருப்பதை ஸேவிப்பதற்கு மதுரையிலிருந்து ஸேவார்த்திகள் திரள்திரளாக வந்திருந்தார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்

(13-வது ஸம்புடம் 7-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இதையெல்லாம் திருவுள்ளத்தில் கொண்டு 'ரேயாஸாரயிமீதயொவநிஷஊாஃரஷ்கூ௰' என்று கீதோபநிஷத் காட்டிய வழியே வழி என்று இங்கு படிப்பது. மாயாஸாரதி என்பதற்கு 'ப்ருக்ருதி என்னும் மாயையைத் தாண்டிவிப்பவர்' என்றும், ஸாரதிவேஷம் பூண்டவர் என்றுமிரண்டு பொருள்கள். 'ஸாரதி' என்பவன் வண்டியோட்டுபவன். வண்டியோட்டுபவர் நெடுவழி தொலைவதற்காகப் பல பாட்டுக்களைக் கற்றுக்கொண்டோ ஸ்வயமிட்டுக் கட்டியோ பாடிக்கொண்டே வண்டியோட்டிப் போவர். ஸாரதி வேஷத்திற்குத் தக்கபடி கீதைப்பேச்சைப் பாட்டாகப்பாடினரென்று ரஸம். கதிசிந்தநாதிகாரத்தில் ஸாதித்தபடி இன்பமனோரதத்தோடு அர்ச்சிராதிகதியைச் சிந்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார். 'ஃமெநாரயெந' என்பதால், 'யாஜீவ ஃமெநாரயெஃ' என்று ஸீதை அசோகவநத்தில் ஸங்கல்பக்குதிரைகள்கட்டிய மனோரதங்களால் ராமஸமீபம் சென்றுகொண்டிருந்த த்யாந ஸமாதியை ஸூசிக்கிறார். கதிசிந்தநாதிகார முடிவில் இந்த ஸீதாவிஷயச்லோகத்தை யுதாஹரித்து 'என்னும்படி பிராட்டி இருந்த இருப்பு இவனுடைய கத்யநுஸந்தானத்திற்கு நிதர்சந'மென்று ஸாதிக்கப்பட்டது.

வேங்கடம் போன்ற கிரி, காசீ, காஞ்சீ, ஸ்ரீரங்கம் முதலிய நகரம், தீர்த்தம், ஆச்ரமம், தபோவநம் முதலிய ஸர்வதர்மக்ஷேத்ரங்களின் ஒருமித்த சேர்க்கையாவாரிப்புண்யபுருஷர். பகவத்ஸங்கல்பமாகிய எனது வரவை எதிர்பார்க்குமிவரை தாமதமன்னியில் உடனே நெருங்குவேன். அப்படிவேண்டாம். கொஞ்சம் மறைந்திருந்து இவருள் கருத்தை நன்கு தெரிந்துகொள்கிறேன்.

(ச்ரத்தை எனும் பெண் கை கொடுத்துக்கொண்டு சாந்தி மதுரமான ஆக்ருதியோடு புருஷன் ப்ரவேசிக்கிறான்.)

புருஷன்—(தன்னுடைய நிலையைப் பராமர்சித்து நிர்வேதத்தோடு—நிர்வேதமென்பது சாந்திரஸத்தின் ஸ்தாயீபாவம்.)

பாபக்காடுகளிலுல்லாஸமாய்த் திரிந்து வந்த என்னுடைய துக்கமயமான பிறவிகளின் தொடர்ச்சி ஒய்ந்துவிட்டது. அநாதி காலமாய்த் தொடர்ந்து வந்தது அந்தமடைந்தது. இந்த ஜந்மத்திலும் முன்னிருந்த பாபக் குவியல்களால் சூழப்பட்டிருந்த நான் பகவானுடைய தயாதேவி கடாக்ஷ விஷயமாகி பலத்திலாசையைத் துறந்த நிவ்ருத்தி தர்மாநுஷ்டானத்தில் இரக்கிவிடப்பட்டேன். விவேகருடைய போரால் மோஹம் எனும் சத்ரு போய்விட்டாலும், ப்ரியதமனை சேஷி, பதி பகவானை அடையாமலிருப்பதால் தவிக்கிறேன். (பெருமூச்சுவிட்டுக்கொண்டு)

விரவஸிவிதஜெவாஃர்யமு விஜாநாவ்ரத்ரா நியதிஃநாஸரஜ்ரா நித்யொஜாயிதாத்ரா । ஙயஃஹரிஹஃநெரா தவெரா தஙு: ஙதிஙதி ஶிவஸாநி க்ஷீணஶக்தி: க்ஷிவெயழ ॥

தேஹத்தோடுஸஹவாஸச்சேர்க்கைபகுகாலமாயுள்ளது. ஸ்தூல தேஹஸஹவாஸம் இந்த ஜந்மம் முதல். ஸூக்ஷ்ம தேஹம் (லிங்க) பகுகாலமாக பரிசயம். தேஹத்தைச் சேர்ந்த பந்துக்களும் சிரபரிசிதர். இதையெல்லாம் பற்றிய கவலை ஒய்வதில்லை. ஸ்வபாவத்தின் பலமிப்படி. 'ஸ்வாவஸ்தாவதெ' என்று பகவான் பாடினர். இதனால் ஆத்மா ஊசலாடுவதுபோலிருக்கிறது. ஜ்ஞானத்தினொளி மின் மினிப் பூச்சியைப்போல் மந்த ப்ரகாசம். அல்ப சக்தியுள்ள நான் இந்த இருள்தரு மா ஞாலத்தில் தேஹ காராக்ருஹத்தில் இன்

னும் எத்தனை காலம் போக்குவேன். 'கூவிக் கொள்ளும் காலம் குறுகாதோ?'

மேலும்—

ந ஜாநேதா ந வ வெஜாஹம் யதா
வஸாநத்யா வரா । க்ருபண:
கிம் கரிஷ்யாமி ந கரிஷ்யாமி வா
ஸுயம் ॥

இது அஜ்ஞானத் தூக்க தசையுமில்லை. ஜ்ஞானானந்தாநுபவமான விழிப்பு தசையாயுமில்லை. 'ஸுாவொமெஉாயவ்ருதிகாரநிஹெ' என்ற மத்யம தசையாயிருக்கிறது. இதற்கேற்றபடி என்ன செய்கிறது, என்ன செய்யாமலிருக்கிறது என்ற இரண்டும் தெரியவில்லை. 'யதா வஸூாக' இனியாகப் பேசுகிறபடி; நானிப்பொழுது முக்தனல்ல. யதா வரா— இதற்குமுன் இருந்தபடி, ந வ வெஜாஹம் நான் பத்த ஸம்ஸாரியுமல்ல. க்ருபண:-நான் அகிஞ்சனனும் அநந்ய கதியுமான பேதை. (க்ருபண:) ஸுயம்—என் புத்தியால் என் சக்தியால் ஹிதகாரணமென்ன, அஹிதாகாரணமென்ன வென்பது அறிவது கஷ்டமாயிருக்கிறது (உத்தக்ருத்யாதிகாரத்திலும் அபராத பரிஹாராதிகாரத்திலுமுள்ள விசாரங்களையும் நிர்ணயங்களையுமிங்கே நினைக்கவேணும்.)

எனக்கென்ன இதைப்பற்றிய சிந்தாபாரம். அநாதிகாலமாய் எல்லையற்ற கருணைக்கடலும், தடையற்ற ஸ்வாதந்த்ரியத்தை உடையவருமான ப்ரபு ஒருவரே, நல்வழியில் என்னை நடத்தவும், தீயவழியிலிருந்து விலக்குவதிலும் ப்ரமாணம். அவர் திருவுள்ளப்படி அவருக்கதீனமும், அவராலேயே ப்ரேரிக்கப்படும் புத்தியையுடைய என்னை நடத்திவைக்கட்டுமென்ற தெளிவு எனக்கு வந்துவிட்டது. (சற்று ஆலோசித்து நின்று)

கஉதிவிஹிதொரம்ஹஸோவொஉ சஜ்பி
த்ாஹஉரஸி தஃஶஉிதவிவமெஸஸெவா
உஎெஹெ ஶுஉஉஷி ராஶிதஃ। வரஉ
வரஷ யாந ஷோது வணாஉ
உரவெஉஜரவெஃ வரிஹூதஉயா

காஷெகேஷவஃ ஹமெஉாஉய உஉஷியெ ॥

பகவானே கதி. 'யியொயொநஃவுவொ உயாக' என்றபடி அவரே என்னுடைய புத்தி ப்ரவ்ருத்திகளையெல்லாம் ப்ரேரண நியமனங்கள் செய்யட்டுமென்று அவருக்கே அதீனமாக இருக்கையில் புத்திபூர்வகமாக நான் இனி பாபம் செய்ய ப்ரஸக்தியே யில்லை. அதிகமாய், தெரியாமல் அபராதங்களெத்தனை நேர்ந்தாலும் அவை என்னிடமொட்டாமல் பகவான் தயையால் உடனே விட்டுவிடுகின்றன. விரோதிகளையெல்லாம் ஜயித்தும் ஸத்வம் உச்சமாயிருப்பதுமான சமம் தமம் முதலியகுணங்கள் பகவத் க்ருபையால் என்னைவிட்டு நீங்காமலிருக்கின்றன. (அதனால் பாப புத்திக்கும் பாப க்ரியைகளுக்கு மிடமே யில்லை) ஆனால் பொழுது போகவேணுமே. 'நஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் । கார்யதெஹ்யவஶ: கஉம ஸவஃப்ரக்ருதிஜெகுணை: ॥' என்றபடி ப்ரக்ருதி ப்ராக்ருத குணங்களால் ஏதாவது தேஹாதி வ்யாபாரங்களில் வ்யாப்ருதனாயிருந்துதானே காலத்தைக் கழிக்கவேணுமென்று கேட்டால், வரஉவரஷயாநஷோது வணாஉரவெஉரவெ:—பரமபுருஷ- ஸர்வத்திற்கும் காரணமும் தனக்கு மேற்பட்ட பரமில்லாததுமான பகவானை, 'வரஷாஹவரம் கிஞ்சிதாகாஷ்டா ஸா வராகதி:' என்ற பரம காரணனை பரமப்ராப்யனை த்யானம் ஸ்தோத்ரம் நமஸ்காரம் முதலிய யஜ்ஞங்களால் பொழுதைப் பழுதாக்காமல் ப்ராஹ்மநிஷ்டை வழியிலேயே நடந்து பலோதயத்தை பகவத்ஸங்கல்போதயத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன். 'ஈஸோஹஸுயுஉரரரணிதஃ' 'யொமயஜஞாஹயாவரெ' த்யானமும் யாகம்.

ச்ரத்தை—ஸ்வாமி! உண்மை தெரியாத பெண்ணாகையால் ஒன்று கேட்கிறேன். மிக்க ஸந்தோஷஸமயத்திலும் உம் மதியைப்பற்றிக் குறைவாக என் நினைக்கவேணும். மோக்ஷத்தின் ஸித்த மிகவும் மருகாமை யிலுள்ளதல்லவோ

புருஷன்—மோக்ஷப்பேறு ஸித்திப்பதாயிருப்பினும் தோஷங்கள் விடமுடியாமல் தொடரும் கொடுமை ஜ்ஞானத்தைத் தகைகிறது.

ஸக்ருத³பி விநதாநாம் ஸர்வத³ம் ஸர்வ
தே³ஹிந்யுபநிஷதி³ விஷயே ஸாம
யே விஷயே । ரமதி ந க்ஷணமபி
மோஹதோ ஹா ஹதோऽஹம் விஷம
விஷயசிந்தா ஜ்வாலயா ஜ்வாலயாஶா ॥

உபநிஷதி³ விஷயே—புத்திக்கெட்டாத மிகதூரமான பரம் பொருளையும் தம் கருணையால் நம் புத்திக்கெட்டும்படி ஸமீபத்திற்குக் கொண்டுவருவது போலத் தெளிவாக விளக்கும், ஸாமயே—நமக்குப் பரமபாக்யமான பரம்பொருள், ஸர்வதே³ஹிநி—நாம் கோராமல் நாம் அறியாமல் எல்லாருடைய ஶரீரத்திற்குள்ளும் உள்ளுயிராய் நீங்காத ஸ்திர வாஸம் செய்துகொண்டு, ஸக்ருத³பி விநதாநாம்—ஒருக்கால்வணங்குகிறவர்களுக்கும், ஸர்வத³ம்—எதையும் கொடுப்பதென்று, ஸதை³வ ஹிநி—எப்பொழுதும் ஆசையும் ப்ரயத்நமும் செய்துகொண்டு, விஷயே—நம் விருப்பத்திற்கு அநுகூலமாக விருந்தும், மோஹத:—அநாதி மோஹ வலிமையால், விஷமவிஷய ஜ்வாலா—விஷமங்களான விஷய நினைவுகளால் பெருகும். ஜ்வாலயாஶா—என்னுடைய அடங்கா ஆசை, க்ஷணமபி ரமதி—ஒருநொடிப் பொழுதும் நிற்பதில்லை. ஹா ஹதோऽஹம்—ஐயோ, நான் எத்தனை பாபி. கெட்டேன், கெட்டேன்.

ச்ரத்தை—தொலைந்துபோன பழைய நடப்பையே இப்பொழுதும் நினைவுக்கு இழுத்துக் கொண்டுவந்து துயரப்படுகிறீரே.

புருஷன்—அம்மா! ப்ராரப்த கர்மத்தால் இன்னும் என்னென்ன விளையுமோ வென்று என் மநம் அச்சப்படுகிறது. அது கிடக்கட்டும். அதைப் பற்றி என் வீண் கவலை. ஓயாமல் பகவத் பஜநத்திலாழும் யோகத்தில் நிற்கும் நான் எப்பொழுதும் மிகவும் ஜாக்ரதையாயிருக்கவேணும்.

ம்ருத்யுரத்³யேதி விஜ்ஞாய யத்கர்தவ்யம்
ஹிதம் தே³ஹிநா । தத³த்³யைவ நித்யம்
கர்தவ்யமநியதாஸித ம்ருத்யுநா ॥

இன்றைக்கு தேஹம் முடியுமென்று தெரிந்தவன் தன் ஆத்மாவின் ஹிதத்திற்காக எப்படி நடக்கவேணுமோ, தன் முடிவு எப்பொழுதென்று நிச்சயமில்லாதவனும் எப்பொழுதும் இடைவிடாமல் அப்படியே நடக்கவேணும்.

ச்ரத்தை—ஆயினும் தேவரீர் தோஷங்களின் ஸம்பவத்தை சங்கிக்கக்கூடாது. இன்றோ, மற்றோர் நாளோ மோக்ஷம் கிடைத்தே தீருமென்று விச்வாஸத்துடன் நிம்மதியாகவே யிருக்கவேணும்.

புருஷன்—அம்மா!

‘ஏதமித: ப்ரேத்யாபி⁴ஸம்ப⁴விதாஸ்மி இதி யஸ்ய ஸ்யாத³த்³தா⁴ ந விசிகித்ஸாஸ்தி’

என் ஹ்ருதயத்திற்குள் உள்ளுயிராய் என்னை மோக்ஷம் சேர்த்துக் காக்கவேணுமென்று உறைந்து நித்யவாஸம் செய்யும் ப்ரஹ்மத்தை இத்தேஹம் விழுந்ததும் அடைந்து புகுந்து கலந்து வாழ்வேன் என்ற உறுதியான விச்வாஸத்தோடு இருப்பேன். துளியேனுமில் ஸந்தேஹப்படேன். சாந்தோக்ய உபநிஷத்தில் சாண்டில்ய பகவான் வழிகாட்டியிருப்பதை நீ எனக்கு நினைவூட்டுவது யுக்தமே. (அந்த இடத்தில் பரயும ஸீதாமும் உபநிஷத்தின் கருத்தை ‘நீவாரஶூகவத்’ நீ கண்ணெடுத்துப் பார் என்றே உன்னுடைய சிறுபுல்லிய ஹ்ருதய குஹையில் உலகம் யாவையுமாக்கிக் காத்து உட்கொள்ளும் காரண ப்ரஹ்மம் விடாமல் நித்யவாஸம் செய்கிறது’ என்று விளக்கியதை ‘ஸர்வதே³ஹிநி’ என்றுமுன்ச்லோகத்தில்ஸ்வாமிவ்யஞ்ஜநம்செய்கிறாரென்பதின் மபாருத்தமிதனால் விளங்கும்.) நான் அச்சமற்று த்ருடவிச்வாஸத்தோடே யிருக்கிறேனென்றும் என் மன உறுதியை விஷ்ணு பக்தி தேவியிடம்போய்ச் சொல்.

ச்ரத்தா—அப்படியே செய்கிறேன் (என்று சென்றாள்.)

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

ஜய ஞூ புரட்டாசி-ஐப்பசி மீ 1954 ஞூ ஸெப்டம்பர்-அக்டோபர் மீ

[தக்ஷிணாயநம்; வர்ஷ ருது-சரத் ருது; கன்யா-துலா மீ]

17-9-54	புரட்டாசி மீ 1௳	வெள்ளிக்கிழமை	கந்யாக்ருஷ்ண ஷஷ்டி திதி. ஷடசீதி. ஸங்க்ரமண தர்ப்பணம்.
18-9-54	2௳	சனிக்கிழமை	ஸப்தமி திதி.
19-9-54	3௳	ஞாயிற்றுக்கிழமை	மத்யாஷ்டமி.
23-9-54	7௳	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம். ஸந்யஸ்த மஹாளயம்.
26-9-54	10௳	ஞாயிற்றுக்கிழமை	● மஹாளய அமாவாஸ்யை.
28-9-54	12௳	செவ்வாய்க்கிழமை	நவராத்ரி ஆரம்பம்.
30-9-54	14௳	வியாழக்கிழமை	சதுர்த்தி திதி.
1-10-54	15௳	வெள்ளிக்கிழமை	அதிதி. விசாகம். 33-வது பட்டம் ஸ்ரீசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
2-10-54	16௳	சனிக்கிழமை	பஞ்சமி திதி.
3-10-54	17௳	ஞாயிற்றுக்கிழமை	திருக்கேட்டை. ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
6-10-54	20௳	புதன்கிழமை	மஹாநவமி.
7-10-54	21௳	வியாழக்கிழமை	திருவோணம். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ரம். விஜயதசமி.
8-10-54	22௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி.
10-10-54	24௳	ஞாயிற்றுக்கிழமை	த்ரயோதசி திதி.
11-10-54	25௳	திங்கட்கிழமை	சதுர்தசி- பூர்ணிமை திதித்வயம்.
16-10-54	30௳	சனிக்கிழமை	கன்யா க்ருஷ்ண பஞ்சமிதிதி.
17-10-54	ஐப்பசி மீ 1௳	ஞாயிற்றுக்கிழமை	துலாரவி 23-3 ஸங்க்ரமண தர்ப்பணம். சூன்யதிதி.
22-10-54	6௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி.
24-10-54	8௳	ஞாயிற்றுக்கிழமை	ராத்ரி நரகசதுர்தசி ஸ்நாநம்.
25-10-54	9௳	திங்கட்கிழமை	தீபாவளி.
26-10-54	10௳	செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை.

Regd. No. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

விளம்பர விகிதங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற் கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு	ரூ.	10—0—0
௸ ஒரு வருஷத்திற்கு	ரூ.	100—0—0
௸ அரை ௸ த்திற்கு	ரூ.	60—0—0
௸ அரை பக்கத்திற்கு:		
ஒரு தடவைக்கு	ரூ.	6—0—0
௸ ஒரு வருஷத்திற்கு	ரூ.	60—0—0
௸ அரை ௸ த்திற்கு	ரூ.	30—0—0

உள்பக்கங்களில்:

ஒரு பக்கம் ஒரு தடவைக்கு ...	ரூ.	6—0—0
௸ ஒரு வருஷத்திற்கு ...	ரூ.	60—0—0
௸ அரை வருஷத்திற்கு ...	ரூ.	35—0—0
அரை பக்கம் ஒரு தடவைக்கு ...	ரூ.	3—8—0
௸ ஒரு வருஷத்திற்கு ...	ரூ.	35—0—0
௸ அரை வருஷத்திற்கு ...	ரூ.	18—0—0

காண்ட்ராக்ட் விளம்பரங்களுக்கும் தர்மஸ்தாபன விளம்பரங்களுக்கும் 20% சலுகை காட்டப்படும். ஸம்பாதகரால் அங்கீகரிக்கப்படும் விளம்பரங்களே ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பரத்திற்கான கட்டணத்தை அட்வான்ஸாக செலுத்திவிடவேண்டும்.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸத்தில் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

மானேஜர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்",
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

Printed & Published by Sri J. Rangacharyar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.